# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 10 அதிர்வு 109 ஆடி 2026 editor@ethiroli.com தொ.பே:1800 960 162



**Budget Friendly**
Home Improvements Pty Ltd
Quality
Renovation Work
0400 287 198














ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்


ROYAL
INTERNATIONAL
MONEY TRANSFERS
EASY • FAST • SAFETY
நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டினொங்' இல்
புதியதோர் சேவை
BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank
Same day bank transfer
No One Beat Our Rate
THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175
(03) 87649143
0406409403
royalinfomoney@gmail.com


GRACE GROCERY
FRESH FINDS GREAT DEALS
INDIAN AND SRILANKAN
GRACE GROCERY
INDIAN AND SRILANKAN GROCERY
Our Current Location
Casey Central (Narre Warren) and Clyde North next to ALDI/Bunnings
Our New Locations Opening Soon
• Mambourin Shopping Centre (Mambourin) - 2025 / • Farm Gate Local (Clyde) - 2025
• Ramlegh Shopping Centre (Clyde) - 2025 / • Orana Shopping Centre (Clyde) - 2026





# காற்றில் பறந்த உலகக் கோப்பை விதிகள்: டிரம்பும் FIFA-வின் அதிர்ச்சி முடிவும்!

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

‘பணம், அதிகாரம் மற்றும் அரசியல் ஆகியவை விதிகளை நிர்ணயிக்கத் தொடங்கினால், உலகக் கோப்பையின் மதிப்பும் கண்ணியமும் காற்றில் பறந்துவிடும்!”

உலகக் கால்பந்து என்பது வெறும் பந்தைத் துரத்தும் விளையாட்டு மட்டுமல்ல. அது உலக அரசியல், பொருளாதாரம், தேசிய அடையாளம் மற்றும் சர்வதேச செல்வாக்கு ஆகிய அத்தனையும் சங்கமிக்கும் ஒரு பிரமாண்டமான போர்க்களம். அதனால்தான், FIFA உலகக் கோப்பை மேடையில் எடுக்கப்படும் ஒவ்வொரு நகர்வும் உலகளாவிய ரீதியில் உற்றுநோக்கப்படுகிறது. அந்த வகையில், 2026 உலகக் கோப்பைத் தொடரில் அமெரிக்க அணியின் முன்னணி நட்சத்திர வீரரான போலரின் பலோகுன் (Folarin Balogun) மீது விதிக்கப்பட்டிருந்த போட்டித் தடையை FIFA திடீரென ரத்துச் செய்திருப்பது, உலக விளையாட்டு வரலாற்றிலேயே மாபெரும் புயலைக் கிளப்பியுள்ளது. இந்த அதிரடி முடிவின் பின்னணியில் அமெரிக்காவின் அரசியல் பலம் பொருந்திய டொனால்ட் டிரம்ப் நேரடியாகத் தலையிட்டதாக வெளியாகும் தகவல்கள், “விளையாட்டுத் துறையில் அரசியல் அதிகாரம் எவ்வளவு தூரம் ஊடுருவலாம்?” என்ற மிகக் கடுமையான விவாதத்தை மீண்டும் தீப்பற்ற வைத்துள்ளது.



## மைதானத்தில் விழுந்த அடியும் மாறிய விதியும்

சர்ச்சையின் தொடக்கம் அமெரிக்கா மற்றும் பொஸ்னியா அணிகளுக்கு இடையிலான உலகக் கோப்பை நொக்அவுட் சுற்றுப் போட்டியிலிருந்து ஆரம்பமாகிறது. ஆட்டத்தின் போது அமெரிக்காவின் அதிரடித் தாக்குதல் ஆட்டக்காரரான பலோகுன், எதிரணி வீரர் தாரிக் முஹரேமோவிக்கைக் காலால் மிதித்ததாக நடுவர் கருதினார். உடனடியாக VAR (Video Assistant Referee) தொழில்நுட்பத்தின் மூலம் மீளாய்வு செய்யப்பட்டு, பலோகுனுக்கு ‘நேரடி சிவப்பு அட்டை’ (Direct Red Card) காட்டப்பட்டு மைதானத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். சர்வதேச கால்பந்து விதிகளின்படி, நேரடி சிவப்பு அட்டை பெறும் ஒரு வீரர் அடுத்த போட்டியில் விளையாட முடியாது என்பது எழுதப்படாத சட்டம். இதன்படி, பெல்ஜியத்திற்கு எதிரான வாழ்வா-சாவா ஆட்டத்தில் பலோகுன் விளையாட முடியாது என்று ஒட்டுமொத்த கால்பந்து உலகமும் நம்பியிருந்த வேளையில்தான், அந்த அதிரடித் திருப்பம் அரங்கேறியது.

FIFA தலைவர் ஜியானி இன்ஃபான்டினோவுடன் டொனால்ட் டிரம்ப் கொண்டிருக்கும் தனிப்பட்ட நெருக்கத்தைப் பயன்படுத்தி, பலோகுன் மீதான தடையை நீக்குமாறு டிரம்ப் தரப்பிலிருந்து நேரடி அழுத்தங்கள் கொடுக்கப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் அதிரடிச் செய்திகளை வெளியிட்டன. வியக்கத்தக்க வகையில், அடுத்த சில தினங்களிலேயே FIFA ஒழுங்குமுறைக் குழு தனது இரும்பு விதியைத் தளர்த்தியது. முழுமையான போட்டித் தடையாக இருந்த தண்டனை, ஒரு வருட நிபந்தனைக்குட்பட்ட தற்காலிக தடையாக மாற்றப்பட்டு, பெல்ஜியத்திற்கு எதிரான போட்டியில் பலோகுன் களம் இறங்க பச்சைக்கொடி காட்டப்பட்டது. இந்த அறிவிப்பு வெளியான சில நிமிடங்களிலேயே டொனால்ட் டிரம்ப் தனது சமூக ஊடகப் பக்கத்தில், “ஒரு பெரிய அநீதியைச் சரிசெய்த FIFA-விற்கு வாழ்த்துகள்!” என்று பதிவிட்டது, இந்த விவகாரத்தில் அவரது தலையீடு இருந்ததை மறைமுகமாக அம்பலப்படுத்தியது.

## பெல்ஜியத்தின் போர்க்கொடியும் அமெரிக்காவின் தற்காப்பும்

FIFA-வின் இந்த ஒருதலைப்பட்சமான முடிவுக்கு பெல்ஜிய கால்பந்து சங்கம் தனது கடுமையான எதிர்ப்பைப் பதிவு செய்துள்ளது. “உலகக் கோப்பையில் சிலருக்கு ஒரு விதியும், சாமானியர்களுக்கு வேறு விதியும் இருந்தால் போட்டியின் நம்பகத்தன்மை என்னாவது?” என்று அவர்கள் கொதித்துப் போயுள்ளனர். பெல்ஜிய அணியின் பயிற்சியாளர் ரூடி கார்சியா, “ஜூலை 5-ஆம் திகதி FIFA-விற்கு ஏப்ரல் 1-ஆம் திகதி (முட்டாள்கள் தினம்) போலத் தோன்றுகிறதா?” என்று நகைச்சுவை கலந்த சாட்டையடி விமர்சனத்தை முன்வைக்க, அணியின் அனுபவமிக்க கோல் காப்பாளர் தியாபட் “இன்று ஒரு தலைவருக்காக விதி மாற்றப்பட்டால், நாளை வேறு யாருக்காக மாறாது என்பதற்கு என்ன நிச்சயம்?” என்று விளையாட்டு உலகின் எதிர்காலம் குறித்த அச்சத்தை வெளிப்படுத்தியுள்ளார். பெல்ஜிய விளையாட்டுத்துறை அமைச்சர் ஜாக்குலினும், “விதிகளுக்கு உட்பட்டு வெல்வதே உண்மையான வெற்றி” எனத் தன் கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

மறுபுறம், அமெரிக்க அணியின் பயிற்சியாளர் மாரிசியோ பொகெட்டினோ இந்த முடிவை நியாயப்படுத்தியுள்ளார். பலோகுனுக்கு வழங்கப்பட்ட சிவப்பு அட்டையே தவறானது என்றும், அந்தத் தவறைத்தான் FIFA தற்போது திருத்தியுள்ளது என்றும் அவர் வாதிடுகிறார். அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ கூட முன்னதாகவே இந்த சிவப்பு அட்டை அநியாயமானது என்று கூறியிருந்தது, இந்த விவகாரம் விளையாட்டைத் தாண்டி இரு நாட்டு அரசியல் யுத்தமாக மாறியிருப்பதை உறுதி செய்கிறது.

## நடுநிலைமைக்கு வந்த சோதனை!

விளையாட்டின் ஆகச்சிறந்த அழகே அதன் நடுநிலைத்தன்மை தான். எந்த நாடாக இருந்தாலும், எவ்வளவு பெரிய அதிகார பலம் கொண்டவராக இருந்தாலும் விதிகளுக்கு முன்னால் அனைவரும் சமம் என்ற நம்பிக்கையில்தான் உலகக் கோப்பை போன்ற தொடர்கள் கொண்டாடப்படுகின்றன. ஆனால், அரசியல் சக்திகளால் விதிகளையே வளைக்க முடியும் என்ற முன்னுதாரணம், FIFA பல ஆண்டுகளாக எதிர்கொண்டு வரும் ஊழல் மற்றும் நிர்வாகச் சீர்கேடு குற்றச்சாட்டுகளை மேலும் வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது. இந்தச் சம்பவம் உலக விளையாட்டு நிர்வாகத்திற்கு விடப்பட்ட ஒரு பகிரங்க எச்சரிக்கை மணியாகும். FIFA தனது முடிவுகள் அரசியல் செல்வாக்கிற்கு அப்பாற்பட்டவை என்பதை உலகிற்கு நிரூபிக்கத் தவறினால், உலகக் கோப்பை என்பது திறமைகளை மதிக்கும் மேடையாக இல்லாமல், அதிகாரமும் அரசியலும் சதுரங்கம் ஆடும் வெறும் சூதாட்டக் களமாக மாறிவிடும் என்பதில் ஐயமில்லை. ■


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284

# செம்மணி அகழ்வுகள்: நீதிக்கான தேடலா அல்லது அரசியல் சடங்கா?

● கருணாகரன்

இலங்கையில் இரண்டு விதமான அகழ்வுப்பணிகள் நடக்கின்றன. ஒன்று, இலங்கை அரசு திட்டமிட்டுச் செயற்படுத்துகின்ற தொல்பொருள் அகழ்வுப் பணி. இது பௌத்த சிங்கள மேலாதிக்கத்தை விரிவாக்குவதற்கும் நிலைப்படுத்துவதற்குமான ஏற்பாடு. வடக்கு- கிழக்கு மாகாணங்களில்தான் இந்தப் பணி மும்முரப்படுத்தப்பட்டுள்ளது. இது தேவையில்லாத ஒரு பிரச்சினையும் கூட. இரண்டாவது, மனித உரிமை மீறல்களோடு தொடர்புடையது. காணாமலாக்கப்பட்டு அல்லது அரசியல் முரண்பாடுகள் காரணமாகக் கொன்று புதைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படும் மனிதப்புதைகுழிகளைத் தோண்டுவது.

இதில் மிகப் பெரிய புதைகுழியாக இருப்பது யாழ்ப்பாணம் - செம்மணிப் புதைகுழியாகும். இங்கே இதுவரையில் 417 மனித எலும்புக் கூடுகளும் பாதணிகள், விளையாட்டுப் பொருட்கள், ஆடைகள், கைப்பைகள் போன்ற ஏனைய தடயப்பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

இந்த அகழ்வினை அரசாங்கம் விரும்பவில்லை. ஆனாலும் அதனால் இதைத் தவிர்க்க முடியாதிருக்கிறது. காரணம், மக்களுடைய விழிப்புணர்வுப் போராட்டங்களும் சர்வதேச அழுத்தங்கள், அவதானிப்புகளுமாகும்.

இதனால் போருக்குப் பிந்தைய அரசியற் சூழலில், செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள், வெறுமனே சான்றுகளைத் தேடும் ஒரு தொழில்நுட்ப நடவடிக்கையாக இல்லாமல், இது பல தசாப்த காலங்களாக மூடிமறைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள், அரசியல் பழிதீர்த்தல்கள் பற்றிய உண்மைகளையும், கூட்டு மனவடுக்களையும் (Collective Trauma) கிளறி, அதன் மூலம் நீதிக்கான போராட்டங்களை நடத்தக்கூடிய ஒரு தீவிர அரசியல் நிகழ்வாக மாறியுள்ளது.

இது 1990 களின் பிற்பகுதியிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களின் மௌன சாட்சியாக விளங்கும் பல விடயங்கள் இன்று மேலெழுந்து கொள்வதற்கு இது வாய்ப்பளித்துள்ளது. இதனால், இது சர்வதேச அழுத்தங்களுக்கும் உள்நாட்டுப் பேரினவாதப் போக்குகளுக்கும் இடையிலான ஓர் அரசியல் போர்க்களமாக மாறியுள்ளது எனலாம்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் தொடர்ச்சியான போராட்டங்களும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் (UNHRC) கண்காணிப்பும், இந்த அகழ்வுப் பணிகளுக்குச் சர்வதேசப் பரிமாணத்தை வழங்கியுள்ளன. ஆயினும், இலங்கையின் இடைக்கால நீதி (Transitional Justice) மற்றும் பொறுப்புக்கூறல் செயல்முறையானது, உண்மையான அரசியல் விருப்பத்துடன் நகர்கிறதா அல்லது வெறும் சர்வதேச மதிப்பைக் காப்பதற்கான ஒரு தற்காலிக அரசியல் சடங்காகச் சுருங்கிப் போகிறதா என்ற தார்மீகக் கேள்வியை இந்தச் செம்மணி விவகாரம் மீண்டும் உலக அரங்கில் எழுப்பியுள்ளது.

இலங்கையில் இதுவரையில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழிகளில் இது மிகப் பெரிய ஒன்றாகச் சொல்லப்படுகிறது. இதனால் தவிர்க்க முடியாமல் இந்த விடயத்தில் தானும் பொறுப்புடன் நடந்து கொள்கிறோம் என்று NPP அரசாங்கம் வெளிப்படுத்த முயற்சிக்கிறது என்பதால்தான் தொடர்ந்து நடைபெற்றுவரும் மீட்புப் பணிகளையும் அந்த இடத்தையும் பார்ப்பதற்காக இலங்கையின் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, கடந்த 19.06.2026 அன்று செம்மணிக்கு விஜயம் செய்திருந்தார். அப்போது, "இரண்டு ஆண்டுகளுக்குள் அரசாங்கம் இதற்கான ஒரு நீதி விசாரணையை நடத்தி, உரிய தீர்வைத் தரும்" என்று அமைச்சர் கூறியிருக்கிறார். ஆனால், அப்படி நீதி விசாரணைகள் நியாயமான முறையில், நம்பகத்தன்மையோடு நடக்குமா என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை.

இலங்கையின் அரசியல் வரலாற்றில், தமிழ்பேசும் மக்களுக்கு இழைக்கப்பட்ட எத்தகைய அரசியல் அநீதிகளுக்கும் எத்தகைய நீதி வீசாரணைகளும் நேர்மையோடு நடத்தப்பட்டது மில்லை, தீர்வோ நிவாரணமோ வழங்கப்பட்டதுமில்லை. எனவே ஹர்ஷன நாணயக்காரவின் வார்த்தைகளுக்கும் எத்தகைய உத்தரவாதங்களுமில்லை.

இதேவேளை இவ்வளவு தொகையான என்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ள விடயம், அதுவும் யாழ்ப்பாண நகரத்துக்கு அண்மையில் இருந்தாலும் அது யாழ்ப்பாணச் சமூகத்தையோ தமிழ்ச் சமூகத்தையே பெரிதாக உலுக்கியதாக இல்லை என்றே கூறவேண்டியுள்ளது. ஏனென்றால், இதைக் குறித்து யாழ்ப்பாணத்தில் பெரிய அதிர்வுகள் எதையும் காணவில்லை. "இதெல்லாம் எப்போதோ நடந்த ஒரு விடயம். காலம் கடந்த பின் எலும்புக் கூடுகளைத் தோண்டி எடுப்பதால்



என்ன பயன்?" என்று சிலர் கருதலாம் என்பதால்தான் அவ்வப்போது வெளியாகிக் கொண்டிருக்கும் தடயச் செய்திகளை ஊடகங்கள் புள்ளிவிவரங்களாக வெளியிட, அதைப் படித்துக் கடந்துபோகும் உளநிலையில்தான் பலரையும் காண்கிறோம். ஆனால், குறித்த உறவினர்களுக்கும் மனித உரிமையாளர்களுக்கும் மனித குலத்துக்கும் இது மிகப் பெரிய கவனத்திற்குரிய ஒன்றாகும்.

யாழ்ப்பாணத்தை 1994 இல் இலங்கை இராணுவம் ஆக்கிரமிப்புச் செய்த காலத்திலும் 2006 இல் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தபோதும் பல நூற்றுக்கணக் கானோர் காணாமலாக்கப்பட்டனர் கைது செய்யப்பட்டனர். இந்தக் கட்டுரையாளரின் நண்பர்கள், அவருக்குத் தெரிந்த குடும்பங்களின் உறுப்பினர்கள் கூட கடத்தப்பட்டும், காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளனர். அவர்களில் பலருடைய நிலை இன்றுவரையில் தெரியாது.

ஆனால், 1996இல் கிரிஷாந்தி என பாடசாலை மாணவியும் அவருடைய குடும்பத்தினரும் படையினரால் கொல்லப்பட்ட வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட பிரதான சந்தேக நபரான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ செம்மணியில் 400 க்கு மேற்பட்டவர்கள் கொன்று புதைக்கப்பட்டனர் என்று தெரிவித்திருந்தார். இருந்தும் இதற்குப் பின்னர் கூட அந்தப் பகுதியில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கவில்லை.

2025 பெப்ரவரி மாதத்தில், நல்லூர் பிரதேச சபையினரால் அரியாலை - சித்துபாத்தி மயானப் பகுதியில் வடிகால் அமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்காகக் குழிகள் வெட்டப்பட்டபோது, தற்செயலாகப் பல மனித எலும்புச் சிதிலங்கள் வெளியே வந்தன. அதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளே பின்னர் வெளிவந்து கொண்டிருக்கும் இன்றைய உண்மைகள். இதைக் கவனப்படுத்துவதில் சில ஊடகர்களும் ஊடகங்களும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கம் மற்றும் தமிழ் சிவில் அமைப்புகள் போன்றன முக்கியமாக இருந்தாலும் சமூக அடிப்படையில் இது போதாது.

ஆனாலும் சில போராட்டங்களை மக்கள் அமைப்புகள் இணைந்து நடத்தியுள்ளன. குறிப்பாக 2026 ஜூன் 19 அன்று நீதி அமைச்சர் செம்மணிக்குச் சென்றபோது, பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஏ-9 பிரதான வீதியை மறித்து "நீதி இல்லாத நாட்டில் நீதி அமைச்சர் எதற்கு?" என்ற கேள்விகளை எழுப்பியிருந்தன.

இதற்குமுன் 'சம உரிமைக்கான இயக்கம்' போன்ற அமைப்புகள் தமிழ் மற்றும் சிங்கள முற்போக்காளர்களை ஒன்றிணைத்து யாழ்ப்பாணத்தில் போராட்டம் நடத்தி, செம்மணி உண்மைகளை மூடிமறைக்கக் கூடாது என வலியுறுத்தின. 2025 ஜூன் 25 இல் ஐநா மனித உரிமைகள் உயர் ஆணையர் வோல்கர் டர்க் (Volker Turk) செம்மணி மனித புதைகுழிப் பகுதிக்கு நேரில் விஜயம் செய்திருந்தார். அப்பொழுது மக்கள் போராட்ட இயக்கத்தால் "அணையா விளக்கு" போராட்டம் நடைபெற்றது. அவரது வருகையை ஒட்டி இளையோர் மற்றும் சிவில் சமூக அமைப்புகளால் ஜூன் 23 முதல் ஜூன் 25 வரை மூன்று நாட்களுக்குத் தொடர்ச்சியாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இருந்தாலும் இவை போதாது மட்டுமல்ல, தொடர்ச்சியற்றவையும் கூட.

ஆனால், இந்தப் புதைகுழி விவகாரத்தை தமிழ்த்தரப்புகள் சரியாகக் கையாண்டால், அது அரசாங்கத்துக்கு பாரிய நெருக்கடியைக் கொடுப்பது மட்டுமல்ல, இலங்கைப் படையினரின் மனித உரிமை மீறல்களுக்கான தண்டனையை அளிப்பதற்கான அடிப்படையையும் உருவாக்கும். ஏனென்றால், இது சட்டரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் பலமான ஒன்றாகியுள்ளது.

யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றம் இந்த இடத்தை அதிகாரபூர்வமாக ஒரு மனிதப்புதைகுழியாக பிரகடனப்படுத்தி, தொடர் அகழ்வுகளுக்கான சட்டபூர்வ உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. அகழ்வுப் பணிகளுக்கான நிதிக்குக்கூட விரும்பியோ விரும்பாமலோ அரசாங்கம் ஒப்புதல் அளித்திருக்கிறது. ஆகவே இவை இரண்டும் சட்டரீதியாகப் பலமானது. ஐ.நா. மனித உரிமையாளரின் கள விஜயமும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் அவதானிப்பும் சர்வதேசக் கவனத்திற்குரியவை. ஆகவே இது சர்வதேச ரீதியாகவும் கவனத்திற்குரியதாகிறது.

ஆனாலும் கடந்த காலங்களில் புதைகுழிகளை விசாரித்த நீதிவான்கள் மற்றும் தடயவியல் நிபுணர்கள் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டதும், குற்றப் புலனாய்வுத் திணைக் களத்தின் (CID) மந்தகதியான போக்கும் நடைமுறைத் தடைகளாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. அத்துடன், அரசு நிதியை விடுவிக்க தாமதித்ததால் 2025 செப்டம்பர் முதல் 07 மாதங்கள் அகழ்வுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. ஆகவே என்னதானிருந்தாலும் அரசாங்கம் இந்த அகழ்வில் சூழ்ச்சித்தனமாகவே நடந்து கொள்கிறது என்று புரிகிறது என்பதால்தான் தமிழ் தேசியக் கட்சிகள் ஓரளவுக்கு இந்த விடயத்தில் ஒருமுகமாக நின்று குரல் கொடுக்க வேண்டியுள்ளது. இப்போது ஓரளவுக்கு இந்த நிலை உண்டு. ஆனால், அவற்றின் அழுத்தமும் வலுவும் போதாதுள்ளது. "செம்மணி மனிதப் புதைகுழிகள் தமிழினப் படுகொலைக்கான ஆதரமாக மாறக்கூடிய ஒன்றாகவும் அது ஒரு நீதி விவகாரமாகவும் இருப்பதால், இதனைத் தமிழ்த்தரப்பு உரிய வகையில் சர்வதேச விசாரணைக்கு அழுத்தம் கொடுத்தால், அது தமிழர்கள் மீது இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான நீதியைப் பெற்றுத் தருவதற்கான ஒரு திறப்பைத் தரும்" என்று தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்திருக்கிறார். அம்னெஸ்டி இன்டர்நேஷனல் (Amnesty International) போன்ற அமைப்புகள் இதற்குப் பூரண ஆதரவு வழங்குகின்றன.

(07ஆம் பக்கம் பார்க்க)

# செம்மணி அகழ்வுகள்: நீதிக்கான தேடலா அல்லது அரசியல் சடங்கா?

*(06ஆம் பக்கத் தொடர்ச்சி)*

ஆனால், இலங்கையில் அதிகாரத்திலிருந்த அரசாங்கங்கள் இந்த அகழ்வில் ஆரம்பத்திலிருந்தே நேரடியான சர்வதேச தலையீடுகளை மறுத்து வருகின்றன. அத்துடன் தென்னிலங்கையின் பெரும்பான்மைவாத அரசியல் சக்திகளும், இராணுவக் கட்டமைப்பும் இத்தகைய அகழ்வுப் பணிகளைத் தங்களின் வீரியமிக்க 'இராணுவப் பிம்பத்திற்கு' (Military Image) ஏற்படும் அச்சுறுத்தலாகவே பார்க்கின்றன. இதனால், அகழ்வுப் பணிகளைத் தொடங்குவதில் காட்டும் வேகம், அதற்கு வழங்கப்படும் ஒத்துழைப்புகள் போன்றவை அதனைத் தர்க்கரீதியான இறுதிப் புள்ளிக்குக் கொண்டு சேர்ப்பதில் இருப்பதில்லை.

நீதிமன்ற உத்தரவுகள், நிபுணத்துவக் குழுக்களின் நியமனங்கள் என அனைத்தும் சட்ட ரீதியாக நகர்வது போலத் தோன்றினாலும், போதிய நிதி ஒதுக்கீடின்மை, தடயவியல் நிபுணர்களுக்கான பாதுகாப்புச் சவால்கள், நிர்வாகத் தாமதங்கள் போன்றவற்றின் மூலம் இந்த ஒட்டுமொத்த செயல்முறையும் உள்நாட்டிற்குள் முடக்கப்படுகிறது. இதற்கான விசாரணைகள் படைத்தரப்பின் மனித உரிமை மீறல்களில் கொண்டுபோய் நிறுத்தும் என்று இவை கருதுவதே இதற்கான காரணமாகும். இதனால், இது நாட்டின் இறையாண்மைக்கும் தேசிய பாதுகாப்பிற்கும் பாதிப்பு என தென்னிலங்கை அரசியல் தரப்புகள் வழமையைப்போலச் சொல்கின்றன.

சர்வதேச விசாரணைகளையும் தலையீடுகளையும் மறுப்பவர்கள், உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை விரைவுபடுத்தி, அதைச் சுயாதீன முறையில் நேர்மையாகவும் நீதியாகவும் நடத்திக் காட்ட வேண்டும். அதற்கு அவர்கள் தயாரில்லை. எனவேதான் நீதியான உள்நாட்டு விசாரணைக்கு வாய்ப்பில்லை என்று உறுதியாகச் சொல்கிறோம். ஏனென்றால், தமிழ்பேசும் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட இதுவரையான எந்த அநீதிக்கும் எத்தகைய நீதியையும் நேர்மையான விசாரணைகளையும் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு நிவாரணமளிக்கவில்லை. ஆகவே உள்நாட்டு நீதிப்பொறி முறையில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்து சர்வதேச நீதி விசாரணையையே கோர வேண்டியுள்ளது.

தற்போது நடைபெறுகின்ற இந்த அகழ்வுப்பணிகள் கூட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை (UNHRC), சர்வதேச மனித உரிமை அமைப்புகள் இலங்கை மீது செலுத்தும் அழுத்தங்களின் விளைவாகவே நடைபெறுகின்றன. இதனை மேலும் நாம் அழுத்தப்படுத்த வேண்டும். அது இயலும். நாடாளுமன்றத்திற்குள்ளும், உள்ளூர் மட்டத்திலும் அகழ்வுப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு, தடயவியல் நிபுணர்களின் பாதுகாப்பு மற்றும் சாட்சிகளின் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்த வேண்டும் என்று தொடர்ந்து சட்ட ரீதியான அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும்.

எந்தச் சூழலிலும் தமிழ்த்தேசியவாத அரசியற் கட்சிகள் இதனை வெறும் தேர்தல் கால பிரசாரப் பொருளாகவோ அல்லது உணர்ச்சி அரசியல் பேசுவதற்கான கருவியாகவோ சுருக்கிவிடக் கூடாது. பதிலாக இதை அவை தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசுக்குக் கொடுக்கும் அழுத்தமாகக் கையாள வேண்டும். இப்பொழுது தமிழ்த்தரப்புக்கு இவ்வாறான விடயங்களே அரசாங்கத்துக்கான அழுத்தத்தையும் சர்வதேச ரீதியான நெருக்கடியையும் கொடுக்கக் கூடிய பொறிகளாக உள்ளன. இவ்வாறான விடயங்களுக்குப் பொறுப்புக் கூறாமல் அரசு தவறுவது கடினமாகும். எனவே இதைப் புரிந்து கொண்டு தமிழ்த்தரப்பினர் பொறுப்போடும் விவேகத்தோடும் செயற்படுவது அவசியமாகும்.

நாம் மேற்படி விவரங்களுக்குப் பின்னுள்ள மேலும் சில ஆழமான உண்மைகளையும் உணர்வுகளையும் இங்கே பார்க்க வேண்டும். அதுதான் இந்த மாபெரும் மனித உரிமை மீறல் விடயத்தில் அக்கறையற்ற சமூகநிலையை மாற்றுவதற்கும் தமிழ் அரசியற் தரப்புகளின் அடுத்த கட்டச் செயற்பாடுகளுக்குத் தூண்டுவதற்கும் உதவும். அப்படிச் செய்யவில்லை என்றால், இந்த விவகாரமும் கால நீட்சியில் கைவிட்ட ஒன்றாகி விடும்.

உண்மையில், செம்மணி விவகாரத்தின் மிக உறைப்பான பக்கம் என்பது பாதிக்கப்பட்ட மக்களின் தரப்பில் தேங்கிக்கிடக்கும் ஆறாத துயரமும் ஏமாற்றமுமாகும். செம்மணி என்பது வெறும் ஒரு புவியியல் பகுதியோ அல்லது ஒரு குற்றவியல் நிருபணக் களமோ அல்ல அது மூன்று தசாப்தங்களுக்கும் மேலாகத் தொடரும் பாதிக்கப்பட்ட மக்களுடைய கூட்டு மனவடுக்களின் (Collective Trauma) வாழும் சாட்சியமாகும்.

இதனால்தான் ஒவ்வொரு முறை செம்மணியில் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படும் போதும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தாய்மாரும் உறவினர்களும் தங்களின் எஞ்சிய வாழ்நாளுக்குள் உண்மை தெரிந்துவிடாதா என்ற ஏக்கத்துடன் அந்த மண்ணை நோக்கி ஓடுகிறார்கள். மறுபக்கத்தில் இந்த அகழ்வாராய்ச்சிகள் அனைத்தும் முறையான சர்வதேசத் தரத்துடனோ அல்லது பாதிக்கப்பட்ட மக்களின் பங்களிப்புடனோ நடத்தப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு தொடக்கம் முதலே வலுவாக உள்ளன.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தேவைப்படுவது அரசியல் லாபங்களுக்காக அவ்வப்போது நடத்தப்படும் கண்துடைப்பு நாடகங்கள் அல்ல. மாறாக, தங்கள் பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மை. அதற்கான நியாயம். அதற்கான நிலைமாறுகால நீதி (Transitional Justice) மட்டுமே. அதை அரசாங்கம் செய்வதற்கான எந்த நம்பிக்கையும் இல்லை. அதற்கான சாயல்கள் எதுவும் கண்ணுக்குத் தெரியவில்லை.

இன்று செம்மணி மனிதப் புதைகுழி விவகாரமானது இலங்கையின் போருக்குப் பிந்தைய நல்லிணக்கச் செயல்முறையின் (Reconciliation) உண்மையான யோக்கியதையை உரசிப் பார்க்கும் ஒரு முக்கியமான காரணியாக நமக்கு முன்னே உள்ளது. இதனை நாம் சவாலுக்குட்படுத்துவதே அரசியல் வெற்றியும் நீதியைப் பெறுவதற்கான வழியுமாகும்.

ஆகவே, மனிதப் புதைகுழிகளை அகழ்வது என்பது வெறும் எஞ்சிய தடயங்களை மீட்டெடுக்கும் ஒரு சடங்காக (Ritual) நின்றுவிடக் கூடாது. அது கடந்தகாலக் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலையும், பாதிக்கப்பட்ட சமூகத்திற்கான தார்மீக நீதியையும் நோக்கிய நேர்மையான பயணமாக மாற வேண்டும். மாற்றப்பட வேண்டும்.

உள்நாட்டு அரசியல் வாக்கு வங்கிக் கணக்குகளுக்காகவும், சர்வதேச சமூகத்தின் தற்காலிகக் கண் துடைப்பிற்காகவும் விசாரணைகளையும் அகழ்வுகளையும் அரசாங்கம் இழுத்தடிப்பது, பாதிக்கப்பட்ட மக்களின் கூட்டு மனவடுக்களை மேலும் ஆழமாக்குமே தவிர, ஒருபோதும் நிலையான அமைதியைக் கொண்டுவராது. முறையான சர்வதேசக் கண்காணிப்பு, தடயவியல் நிபுணத்துவம், அரசியல் தலையீடற்ற நீதித்துறை ஆகியவற்றின் மூலமே செம்மணியின் உண்மை வெளிவர முடியும்.

கடந்த காலத்தின் கொடூரமான பக்கங்களை நேர்மையுடன் எதிர்கொள்ளத் துணியாத எந்தவொரு நாடும், எந்தச் சமூகமும் ஆரோக்கியமான ஜனநாயக எதிர்காலத்தை நோக்கி நகர முடியாது. ஜனநாயகத்தை நோக்கி நகரமுடியாத எந்த நாடும் முன்னேற்றத்தை எட்டவும் முடியாது. அரசியல் அமைதியையும் வெற்றியையும் பெறவும் முடியாது. மட்டுமல்ல, வெளி அழுத்தங்கள், நிர்ப்பந்தங்களுக்குட்படாமல் சுயாதீனமாகப் பயணிக்கவும் முடியாது. நடந்தவற்றுக்குப் பரிகார நீதியைக் காண்பதென்பது உயரிய பண்பாட்டுச் செயலும் நீதியின் பாற்பட்ட மாண்புப் பணியுமாகும். எனவே, செம்மணி அகழ்வுகள் வெறும் அரசியல் சதுரங்கக் காய்களாகச் சுருக்கப்படாமல், தமிழ் மக்களின் தசாப்த கால நீதிக்கான போராட்டத்திற்கு நியாயமான பதிலை வழங்கும் ஒரு திருப்புமுனையாக அமைய வேண்டும். அதுவே, இந்தத் தீவில் உண்மையான நல்லிணக்கத்திற்கும் அமைதிக்கும் அடித்தளமாக அமையும். ஆனால் இந்த உண்மை தெரிந்தாலும் இலங்கை அரசோ, சிங்கப் பெரும்பான்மை மனப்பாங்கோ இதைச் செய்வதற்கு இடமளிக்காது. இதுதான் துயரமும் வெட்கக் கேடுமாகும். இதைக்குறித்துச் சிங்களச் சமூகத்தினர் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். (இவ்வாறு தமிழ்த்தரப்பும் பொறுப்புடன் சிந்திக்க வேண்டிய விடயங்களும் பரிகாரம் காணவேண்டிய பக்கங்களும் உள்ளன என்பதையும் இந்தக் கட்டுரை ஒப்புரைக்கிறது).

ஆகவே, இதனை தமிழ் அரசியல் கட்சிகளும் இலங்கையின் மனித உரிமைவாதிகளும், தமிழ்ச் சிவில் சமூகமும் உரிய முறையில் முன்னெடுக்க வேண்டும். அதற்கான வேலைத் திட்டமொன்றை வரைந்து கொள்வது அவசியம். அதில், செம்மணி விவகாரம் தொடர்பான சாட்சியங்கள், முந்தைய நீதிமன்ற அறிக்கைகள், தற்போதைய அகழ்வுத் தரவுகளை எல்லாம் எந்தவிதமான அரசியல் கலப்புமின்றி, துல்லியமாக ஆவணப்படுத்த வேண்டும். எதிர்காலத்தில் சர்வதேச நீதிமன்றங்களில் இவை முதன்மைச் சான்றுகளாக மாற்றப்படக் கூடிய அடிப்படைகளை இந்த ஆவணம் கொண்டிருக்க வேண்டும். அத்துடன் இந்த விடயத்தில் அரசியல்வாதிகள் மேடை ஏறுவதை விட, முன்னிலைப்படுவதை விட அல்லது முன்னிலைப்படுத்தப்படுவதை விட பாதிக்கப்பட்ட குடும்பங்களின் உண்மையான கோரிக்கைகளையும் அவர்களின் கூட்டு மனவடுக்களையும் பொதுவெளிக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும் வேலைகளைச் சிவில் அமைப்புகள் முன்னெடுக்க வேண்டும். இதில் ஊடகங்களும் சமூக வலைத்தளப் பதிவர்களும் பொறுப்புணர்வோடு செயற்படுவது அவசியம். அவரவருக்குத் தோன்றும் வகையிலோ அவரவர் கொண்டிருக்கும் அரசியல் விருப்பு வெறுப்புகளின் அடிப்படையிலோ செயற்படாமல் பாதிக்கப்பட்டோருக்கான நீதியைப் பெறுதல் என்ற அடிப்படையில் ஒரு கூட்டுச் செயற்பாட்டில் இருக்கிறோம் என்ற உணர்வுடன் செயற்படுவது அவசியமாகும்.

தமிழ் அரசியற் கட்சிகள் வெவ்வேறு அரசியல் அணிகளாகப் பிரிந்திருந்தாலும், மனிதப் புதைகுழி மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், நிலமீட்பு, அரசியற் கைதிகள் விடுதலை போன்றவற்றிலும் பாதிக்கப்பட்டோருக்கான நீதிகோரல், அரசியற் தீர்வு போன்றவற்றில் அனைத்துத் தரப்புகளும் ஒருமித்த குறைந்தபட்சக் கொள்கை அடிப்படையில் (Common Minimum Program) ஒன்றிணைந்து நிற்க வேண்டும் குரல் கொடுக்க வேண்டும்.

ஏனென்றால், இலங்கையின் பேரினவாத ஆதிக்கச் சூழலும் தற்போதைய மனித உரிமைச் சூழலும் உள்நாட்டுப் பொறிமுறைகள் (Domestic Mechanisms) எல்லாவற்றையும் பலவீனமாக்குவன. எனவே, உள்ளூர் தடயவியல் துறையினருக்கு இருக்கும் அரசியல் மற்றும் நிர்வாக அழுத்தங்களை முறியடிக்க, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையத்தின் மூலமாக சர்வதேச தடயவியல் நிபுணர்கள் (International Forensic Experts), சர்வதேசக் கண்காணிப்பாளர்களின் நேரடிப் பங்களிப்பைக் கோர வேண்டும். மனித உரிமை சட்டத்தரணிகள் ஊடாக இந்த அகழ்வுப் பணிகளை சுயாதீனமான நீதிமன்றக் கண்காணிப்பின் கீழ் (Judicial Oversight) கொண்டு வருவதற்கான சட்டப் போராட்டங்களை தீவிரப்படுத்த வேண்டும்.

அடுத்ததாக, புலம்பெயர் மக்கள் தாங்கள் வாழும் நாடுகளின் (UK, கனடா, ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, ஆஸ்திரேலியா) நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வெளியுறவுக் கொள்கை வகுப்பாளர்கள் மூலம் செம்மணி அகழ்வு விவகாரத்தை சர்வதேச விவாதப் பொருளாக வைத்திருக்க வேண்டும்.

சுருக்கமாகக் கூறின், "உள்நாட்டில் சிவில் சமூகத்தின் ஆவணப்படுத்தல், அரசியல் தரப்புகளின் சட்டப் போராட்டம் + புலம்பெயர் சமூகத்தின் சர்வதேச அழுத்தம்" என்ற இந்த மூன்று முனைகளும் இணையும் போதுதான், செம்மணி அகழ்வு விவகாரத்தை இலங்கை அரசு ஒரு சாதாரண சடங்காகக் கடந்துவிட முடியாதிருக்கும். இதுவே இந்த விவகாரத்தை ஒரு சர்வதேச அளவிலான, பெறுமதியான தீர்வை நோக்கி நகர்த்துவதற்கான சிறந்த வழியாகும்.

ஏனென்றால், 1990-களின் பிற்பகுதியிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களின் சாட்சியாகவே இந்தப் புதைகுழி பார்க்கப்படுகிறது. பல தசாப்தங்களாகத் தங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் தவிக்கும் குடும்பங்களுக்கு, இந்த அகழ்வுப் பணிகள் ஒரு தீர்க்கமான "உண்மை அறியும்" (Truth-seeking) புள்ளியாக அமைகிறது.

ஆகவே செம்மணி அகழ்வு என்பது வெறும் மண்ணைத் தோண்டுவதோ, உக்காத எலும்புக்கூடுகளை மீட்டுப்பார்ப்பதோ அல்ல அது தமிழ் மக்களின் கூட்டு மனவடுக்களையும் (Collective Trauma), இன்னும் ஆறாத போர்க்கால நினைவுகளையும் அரசியல் பெறுமானமாக்கி, தீர்வைக் காண்பதற்கான திறப்பை உருவாக்கும் ஒரு கருவியாகும். இந்தக் கருவியைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்வது தமிழ்ச் சமூகத்தின் பொறுப்பும் திறனுமாகும். ஆம், இன்னொரு பொறுப்புணர்வின் முன்பாகவும் சவாலின் முன்பாகவும் தமிழ்ச்சமூகம் நிறுத்தப்பட்டுள்ளது என்பதால், இன்னொரு சதுரங்க ஆட்டத்தில் தமிழர் தரப்பும் இலங்கை அரசும் நிற்கின்றன. வரலாறு இரண்டு தரப்பையும் இப்படி நிறுத்தியுள்ளது.

# Sai Shree Foods Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

# இனவெறியில் அழியும் பன்மைத்துவம்

**2026** உலகக் கோப்பை கால்பந்து போட்டிக்கு முன்னதாக ஆஸ்திரேலிய தேசிய கால்பந்து அணியான Socceroos நாட்டில் அதிகரித்து வரும் புலம்பெயர்ந்தோருக்கு எதிரான (Anti-immigration) போக்கிற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் ஒரு காணொளியை வெளியிட்டுள்ளது. அணியின் நட்சத்திர வீரர்களான Awer Mabil, Mo Toure, Milos Degenek, Nesteroy Irankunda, Nishan Velupillay போன்ற பல வீரர்கள் ஆபிரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து அகதிகளாகவும், புலம்பெயர்ந்த வர்களாகவும் ஆஸ்திரேலியாவிற்கு வந்தவர்கள். இவர்களில் 20 வீரர்கள் தங்களின் பூர்வீகக் கதைகளைப் பகிர்ந்து, “கால்பந்து என்பது அனைவருக்கும் பொதுவானது பன்முகத்தன்மையே எங்கள் பலம்” என்று முழங்கினர். ஆஸ்திரேலிய அணி 32 அணிகள் மட்டுமே விளையாடும் இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றதற்கு காரணம் இந்த புலம்பெயர்ந்த வீரர்களின் பங்களிப்பினால் தான் என்பதை யாரும் மறுக்க முடியாது. இவ்வாறு பன்முகத்தன்மையை ஊக்குவிக்கும் இதே வேளையில் தான் நிறவெறியைத் தூண்டும் சக்திகளும் வளர்ந்து வருகின்றன என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

2026-ஆம் ஆண்டின் உலக அரசியல் வரைபடத்தை உற்றுநோக்கினால் ஒரு விஷயம் மிகத்தெளிவாகப் புரியும். பரப்பியம் (Populism) என்று அழைக்கப்படும் உணர்ச்சிப்பூர்வமான அரசியல் உலகெங்கும் அசுர வேகத்தில் பரவி வருகிறது. உலக ஜனநாயக நாடுகளில் கிட்டத்தட்ட கால்வாசி நாடுகள் இன்று ஏதேனும் ஒரு வகையில் சர்வாதிகாரப் போக்குடைய அல்லது பாப்புலிசத் தலைவர்களின் கைகளில்தான் சிக்கியிருக்கின்றன. இந்த உலகளாவிய அலையிலிருந்து ஆஸ்திரேலியாவும் தப்பவில்லை என்பதுதான் தற்போதைய கசப்பான உண்மை. ஆஸ்திரேலிய அரசியலில் கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு ‘எரிமலை’ போலக் குமுறிக் கொண்டிருக்கும் பாலின் ஹான்சன் (Pauline Hanson) மற்றும் அவரது One Nation கட்சியின் அண்மைக்கால அசுர வளர்ச்சி நமது பாரம்பரிய அரசியல் கட்டமைப்பையே உலுக்கத் தொடங்கியுள்ளது.

பிரதமர் அந்தோனி அல்பானிஸ், எதிர்க்கட்சித் தலைவர் அங்கஸ் டெய்லர் ஆகிய இருவரையும் விடப் பாலின் ஹான்சனின் தற்போதைய மக்கள் செல்வாக்கு (Net Approval Ratings) கணிசமாக உயர்ந்து நிற்பதாகப் புள்ளிவிவரங்கள் எச்சரிக்கின்றன. அமெரிக்காவின் டொனால்ட் ட்ரம்பும், ஆஸ்திரேலியாவின் பாலின் ஹான்சனும் வாக்காளர்களின் கோபத்தை முதலீடாக்குவதில் ஒரே பாணியைக் கையாண்டாலும், தற்போது ட்ரம்பின் செல்வாக்கு சரிவைச் சந்திக்கும் வேளையில், ஹான்சனின் ஆதரவு எகிறிக் கொண்டிருப்பது ஆஸ்திரேலிய அரசியலை ஒரு பேராபத்தை நோக்கி நகர்த்துகிறது.

### மாறிய அரசியல் களம்

அரசியல் களம் இன்று முற்றிலுமாக மாறிவிட்டது. 24 மணி நேர செய்தி அலைவரிசைகளையும் (24/7 News Cycle), சமூக வலைத்தளங்களின் அல்கோரிதம்களையும் (Algorithms) துல்லியமாகக் கையாளுவதில் பாரம்பரிய அரசியல்வாதிகளை விடப் பாப்புலிஸ்டுகள் கில்லாடிகளாக இருக்கிறார்கள். பாப்புலிசத் தலைவர்களின் ஆகச்சிறந்த ஆயுதம் -கோபம், பயம் மற்றும் அச்சுறுத்தல். மக்களின் அடிமனதில் இருக்கும் பாதுகாப்பற்ற உணர்ச்சியைத் தூண்டிவிட்டு, அதை தங்களின் அரசியல் லாபத்திற்காகவும், வாக்குகளாகவும் மாற்றுவதில் வல்லவர்களாக இருக்கின்றனர். முன்பெல்லாம் ஊடகங்கள் என்பவை ஜனநாயகத்தின் நான்காவது தூணாக, நேர்மையோடும், பொறுப்புணர்வோடும் செயல்பட்டன. ஆனால், இன்றைய சமூக ஊடக வணிக தந்திரங்களும், பாப்புலிச உத்திகளும் ஒன்றோடொன்று கைகோர்த்துக் கொண்டுள்ளன. மக்களின் கோபத்தை ‘லைக்ஸ்’ மற்றும் ‘வியூஸ்’களாக மாற்றி, அதன் மூலம் பணமும் செல்வாக்கும் சம்பாதிக்கும் ‘மீம் ஃபக்டரி’களாக (Meme Factories) இவை உருவெடுத்துள்ளன. இதன் முதல் பலி... ‘மக்களின் நம்பிக்கை’ (Trust). சர்வதேச அளவில் ஊடகங்கள் மீதான மக்களின் நம்பிக்கை 40% க்கும் கீழே சரிந்துவிட்டது. அமெரிக்காவில் இது 25% என்ற மோசமான நிலையை எட்டியுள்ளது. உண்மை எது, பொய் எது என்று தெரியாத இந்த டிஜிட்டல் பொய்ப் பிரசார யுகத்தில் (Digital Disinformation), பாலின் ஹான்சன் போன்ற தலைவர்கள் தங்களின் ‘கோப அரசியலை’ மிக எளிதாக மக்களை ஏமாற்றுவதற்கு செய்கிறார்கள்.

### மக்களின் கோபத்தை திசைதிருப்புதல்

பொருளாதார நெருக்கடி, கட்டுக்கடங்காத வீட்டு வாடகை, பணவீக்கம், வாழ்க்கைச் செலவினங்களின் உயர்வு (Cost of Living) போன்றவற்றால் ஆஸ்திரேலியாவின் நடுத்தர






மற்றும் உழைக்கும் வர்க்கத்தினர் அரசு மீது கடுமையான கோபத்தில் இருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளும் ஹான்சன், ”மக்களே, உங்களைச் சுரண்டும் இந்த அமைப்பின் மீது நீங்கள் கோபப்படுவது நியாயம்தான். ஆனால், உங்கள் அந்தக் கோபத்திற்கு உண்மையான காரணம் இந்த ஆட்சியாளர்கள் மட்டுமல்ல உங்களுக்குப் பக்கத்தில் இருக்கும் அகதிகளும், புலம்பெயர்ந்தவர்களும்தான் (Migrants).” என்று மக்களிடம் பகையுணர்வை தூண்டிவிடுகிறார் .

வீட்டுவசதிப் பற்றாக்குறைக்கு காரணம் பல தசாப்தங்களாக நிலவி வரும் அரசின் தவறான வரிவிதிப்புக் கொள்கைகளும், பொருளாதாரக் கொள்கைகளும் காரணம் என்பதை மறைத்து, ‘அனைத்திற்கும் புலம்பெயர்ந்தவர்களே காரணம்’ என்று பழிபோடுகிறார். ஆஸ்திரேலியாவை ஒரு ‘ஒற்றைப் பண்பாடு’ (Monocultural Society) கொண்ட நாடாக மாற்ற வேண்டும் என்ற அவரது முழக்கம் ஆஸ்திரேலியாவின் பன்முகத்தன்மைக்கு விடப்பட்ட சவால் ஆகும்

### கிறிஸ்தவ வாக்குகளைக் கவரும் உத்திகள்

இதற்கெல்லாம் ஒருபடி மேலே போய் தற்போது ‘வன் நேஷன்’ கட்சி ஆஸ்திரேலியாவின் கிறிஸ்தவ வாக்காளர்களை (Christian Voters) நேரடியாகக் குறிவைத்துக் களம் இறங்கியுள்ளது. சமீபத்தில் லிபரல் கட்சியில் இருந்து வன் நேஷனில் இணைந்த முன்னாள் துணைப் பிரதமர் பார்னபி ஜாய்ஸ் (Barnaby Joyce), சிட்னியில் நடந்த கருக்கலைப்பு எதிர்ப்புப் பேரணியில் (Anti-Abortion Rally) பங்கேற்று, அங்கிருந்த 1,500-க்கும் மேற்பட்ட கிறிஸ்தவ அமைப்பினரைத் தங்களுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்ய வெளிப்படையாக அழைப்பு விடுத்திருக்கிறார்.

ஆஸ்திரேலிய மக்கள் தொகையில் 44% பேர் கிறிஸ்தவர்களாக இருக்கும் நிலையில், அவர்களின் வாக்குகளைத் தன்பக்கம் இழுக்க ‘யூத-கிறிஸ்தவ விழுமியங்கள்’ (Judeo-Christian Values) என்ற வார்த்தையை ஹான்சன் அடிக்கடி பயன்படுத்துகிறார். ஆனால், ஒன் நேஷன் கட்சியின் கொள்கைகள் உண்மையில் பல கிறிஸ்தவர்களின் மனசாட்சிக்கே (Conscience) எதிரானவை என்பதுதான் முரண்பாடு.

### வன் நேஷன் கொள்கை கிறிஸ்தவ விழுமியங்களின் முரண்பாடு

ஒற்றைப் பண்பாடு (Monoculture): ஆஸ்திரேலியா ஆங்கிலம் மட்டுமே பேசும் நாடாக மாற வேண்டும்.

பல்வகைமை (Diversity): ஆஸ்திரேலியாவின் தேவாலயங்களுக்கு வருபவர்களில் 3-ல் ஒருவர் வெளிநாட்டில் பிறந்தவர். கால்வாசி பேர் வீட்டில் வேறு மொழி பேசுபவர்கள்.

அகதிகள் எதிர்ப்பு (Anti-Refugee): எல்லையை மூடி அகதிகளை விரட்ட வேண்டும்.

அன்பு செலுத்துதல்: “அன்னியரை ஆதரிப்பது மற்றும் ஏழைகளை நேசிப்பது” என்பதே பைபிளின் அடிப்படை போதனை.

இதனால்தான், பல கிறிஸ்தவச் சிந்தனையாளர்கள் “பாலின் ஹான்சனின் இந்த வெறுப்பு அரசியலுக்கு உண்மையான கிறிஸ்தவர்கள் பலியாகக் கூடாது அன்னியரைத் துன்புறுத்துவது கிறிஸ்துவின் போதனை அல்ல” என்று எச்சரிக்கிறார்கள். இருப்பினும், பொருளாதார நெருக்கடியால் விளிம்பில் இருக்கும் உழைக்கும் வர்க்கக் கத்தோலிக்கர்களையும், தீவிரக் கொள்கையுடைய எவாஞ்சலிகல்களையும் தன்வசப்படுத்த ஹான்சன் தொடர்ந்து முயன்று வருகிறார்.

### நிறவெறியினரின் தந்திர வலைக்குள் ஆஸ்திரேலியா வீழாமல் தடுப்பது எப்படி?

பாலின் ஹான்சனின் இந்த தந்திரவலைக்குள் ஆஸ்திரேலியா முழுமையாக விழுந்துவிடாமல் இருக்கவேண்டுமென்றால் பாரம்பரிய தொழிலாளர் மற்றும் கூட்டணி கட்சிகள் (Labor and Coalition) தங்களின் அணுகுமுறையை மாற்ற வேண்டும். முப்பது ஆண்டுகளாக ஹான்சனின் கோபத்திற்கு நாமும் கோபத்தையே பதிலாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம், அது பலன் தராது.

உலக நாடுகளின் பாப்புலிசப் பேரழிவுகளில் இருந்து ஆஸ்திரேலியா கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள்:

1.தீவிர மையவாதம் (Radical Centre): வெறும் கண்துடைப்பு ஆலோசனைகளைத் தவிர்த்து, மக்களின் உண்மையான பொருளாதார அடிப்படை பிரச்சினைகளை ஆட்சியாளர்கள் நேரடியாக எதிர்கொள்ள வேண்டும். வீட்டுவசதி, வேலைவாய்ப்புப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும்.

2.ஊடகப் பொறுப்பு: வலதுசாரித் தீவிரவாதப் பக்கங்களுக்குப் பின்னால் இருக்கும் கார்ப்பரேட் பண பலத்தையும், போலியான விளம்பரங்களையும் ஊடகங்கள் துணிச்சலோடு அம்பலப்படுத்த வேண்டும்.

3.ஆரோக்கியமான அரசியல்: கோபத்தை முதலீடாக்கும் அரசியலுக்குப் பதிலாக, செயல்களையும், துணிச்சலான நல்ல முடிவுகளையும் முன்னிறுத்தும் நேர்மையான அரசியல் தற்போதைய தேவை.

George Orwell-இன் புகழ்பெற்ற அரசியல் நாவலான ‘1984’-இல் ‘Two Minutes Hate” (இரண்டு நிமிட வெறுப்பு)** என்ற நிகழ்வு வரும். அதாவது அந்த நாவலில், சர்வாதிகார அரசு தன் குடிமக்களை ஒரு பெரிய திரையின் முன்னால் தினமும் இரண்டு நிமிடங்கள் அமர வைக்கும். அந்தத் திரையில், நாட்டின் எதிரியாகக் கருதப்படும் ஒருவனின் முகம் தோன்றும். அவனைப்பார்த்ததும் மக்கள் அனைவரும் தங்களின் அன்றாட வறுமை, பசி, ஏமாற்றம் ஆகிய எல்லாவற்றையும் மறந்து, அந்தத் திரையின் மீது தங்களின் ஒட்டுமொத்தக் கோபத்தையும், வெறுப்பையும் கத்திக் கூவிக் கொட்டுவார்கள். இன்று பாலின் ஹான்சன் ஆஸ்திரேலியாவில் செய்வதும் அதேதான். நடுத்தர வர்க்கத்தின் பொருளாதாரக் கோபத்தை, உண்மையான காரணிகளான அரசின் தவறான கொள்கைகளின் மீது திரும்பவிடாமல், ‘புலம்பெயர்ந்தவர்கள்’ மற்றும் ‘அகதிகள்’ என்ற எளிய இலக்குகளின் மீது திருப்பிவிட்டுத் தனது அரசியல் லாபத்தை அறுவடை செய்கிறார். இந்த நிலை இப்படியே தொடர்ந்தால் நமது நாட்டின் தேசிய கீதமான Advance Australia Fair -ல் வரும் Fair என்பது நியாயமான ஆஸ்திரேலியாவைக் குறிப்பிடாமல் வெள்ளையின (Fair ) ஆஸ்திரேலியாவாக மாறிவிடும் என்ற பயம் பலரைப் போல் எனக்கும் உண்டு.




# தசாப்தம் தாண்டியும் தொடரும் பயணம்!

நவீன தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சியும், செயற்கை நுண்ணறிவின் ஆதிக்கமும் உலகையே டிஜிட்டல் திரைக்குள் சுருக்கிவிட்ட இந்த யுகத்தில், வாசிப்புப் பழக்கம் என்பது கானல் நீராகிக் கொண்டிருக்கிறது. இத்தகையதொரு சவாலான உலகளாவிய சூழலில், ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன் மண்ணிலிருந்து வெளியாகும் ஒரேயொரு தமிழ் அச்சு ஊடகமான 'எதிரொலி' தனது பத்தாவது ஆண்டில் பெருமிதத்துடன் காலடி எடுத்து வைப்பது வெறும் ஒரு கொண்டாட்டமல்ல அது புலம்பெயர் தமிழ் ஊடக வரலாற்றில் நிகழ்த்தப்பட்டுள்ள மகத்தான சாதனையும் கூட. கண்ணிமைக்கும் நேரத்தில் செய்திகள் மறைந்துபோகும் இணைய வெளியில், தமிழ் எழுத்துக்களைத் தாங்கி, அச்சு மையின் வாசனையோடு பத்தாண்டுகளாக ஒரு மாதாந்தப் பத்திரிகை மக்களின் கரங்களைச் சென்றடைவது என்பது தமிழுக்கும் தமிழரின் வாசிப்புப் பழக்கத்தின் நீட்சிக்குமான சான்றாகும்.

கடந்த ஒரு தசாப்த காலப் பயணத்தில் எதிரொலி கடந்து வந்த பாதைகள் மலர்ப்படுக்கையாக இருந்ததில்லை. பொருளாதார நெருக்கடிகள், அச்சுச் செலவுகளின் உயர்வு, டிஜிட்டல் ஊடகங்களின் போட்டி எனப் பலத்த புயல்களும் சவால்களும் இந்த ஊடகப் பயணத்தை முடக்கப் பார்த்தன. ஆயினும், எத்தனையோ நெருக்கடிகளைத் தாங்கி எதிரொலி இன்றும் நிமிரந்து நிற்பதற்குக் காரணம், அதன் பின்னால் தூண்களாகத் தாங்கி நிற்கும் எமது வாசகர்களும், தூய்மையான பேனா மையால் படைப்புகளைச் செதுக்கும் படைப்பாளிகளும், பத்திரிகையின் பொருளாதார முதுகெலும்பாக விளங்கும் விளம்பரதாரர்களுமே ஆவர். எல்லாவற்றிற்கும் மேலாக, மெல்பேர்ன் நகரின் மூலைமுடுக்கெல்லாம் எமது பிரதிகள் மக்களைச் சென்றடைவதை உறுதி செய்த தமிழ் அங்காடிக்காரர்களினதும், தன்னார்வலர்களினதும் அர்ப்பணிப்பு மிக்க உழைப்பு, இப் பெருமை மிகு தருணத்தில் நன்றியறிதலுடன் நினைவு கூரத்தக்கது.

புலம்பெயர் தேசங்களில் வாழும் எமது இளைய தலைமுறைக்கும் தமிழ் மொழிக்கும் இடையிலான பாலமாகத் திகழ்வது அச்சு ஊடகங்களே ஆகும். 'எதிரொலி' என்பது வெறும் செய்திகளையும், கட்டுரைகளையும் தரும் காகிதம் மட்டுமல்ல அது தமிழ் பண்பாட்டின், கலைகளின், புலம்பெயர் மக்களின் அன்றாட அவலக்குரல்களின் அசைக்க முடியாத ஆவணமாகும். இந்தத் தசாப்த காலத் தடம் பதிப்பு என்பது எமக்குக் கிடைத்துள்ள மகுடம் மட்டுமல்ல, இன்னும் பல தசாப்தங்களுக்குத் தமிழ் மொழியையும் எமது அடையாளத்தையும் அடுத்த தலைமுறைக்குக் கடத்த வேண்டிய மாபெரும் தார்மீகப் பொறுப்புமாகும்.

அச்சு ஊடகங்கள் அழிகின்றன என்ற அவ நம்பிக்கைப் பேச்சுகளுக்கு மத்தியில், எதிரொலி தனது பத்தாவது ஆண்டின் தொடக்கத்தின் மூலம் ஒரு புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது. வாசகர்களின் தீராத அன்பும், சமூகத்தின் பேராதரவும் இருக்கும் வரை எதிரொலியின் ஊடகப்பயணம் இன்னும் வீரியம் கொள்ளும். எமது தாய்நிலத்தின் துயரங்களையும், புலம்பெயர் தமிழர்களின் வாழ்வியல் வெற்றிகளையும் உலகிற்கு உரக்கச் சொல்லும் 'உண்மைக்கான உரிமைக்குரலாக' எதிரொலி தனது வரலாற்றுப் பயணத்தைத் தொய்வின்றித் தொடரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை!






எதிரொலி
ஆடி 2026

# இரும்புக் கம்பிகளுக்குள் எரியும் வன்முறை:

## இலங்கை சிறைச்சாலைகளில் வன்முறையும் அரசின் பொறுப்பற்ற நிலையும்

● கருணாகரன்

இலங்கையின் சிறைச்சாலைப் படுகொலைகளுக்கும் சிறைகளில் நடக்கின்ற வன்முறைகளுக்கும் ஒரு நீண்ட சங்கிலித் தொடர் வரலாறுண்டு. அந்த வரலாற்றுத் தொடர்ச்சியாகத்தான் அண்மையில் நீர்கொழும்புச் சிறைச்சாலையில் நடந்த வன்முறைகளும் கொலைகளும் இடம்பெற்றுள்ளன. இது அரசாங்கத்தின் தவறுகளையும் பலவீனத்தையும் தெளிவாகவே காட்டுகிறது. ஆகவே இதற்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்க வேண்டும். அரசாங்கத்தின் நீதித்துறைக்கு இதில் பல பாத்திரங்கள் உள்ளன.

முதலாவது சிறைவன்முறை அல்லது சிறைச்சாலைப் படுகொலை 1983 ஜூலையில் தமிழ் அரசியற் கைதிகளின் மீது நடத்தப்பட்டது. இதில் 53 தமிழ் அரசியற் கைதிகள் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தில் சிறைச்சாலை ஊழியர்கள், உத்தியோகத்தர்கள், அதிகாரிகள் உட்பட சிறைச்சாலையில் இருந்த சிங்களக் கைதிகள் எவரும் எத்தகைய பாதிப்பையும் சந்திக்கவில்லை. ஏனென்றால், இது அன்றிருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன (ஐ.தே.க) அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட வன்முறையும் படுகொலையுமாகும்.

சர்வதேச அளவில் அதிர்ச்சியளித்த இந்தப் படுகொலைகளை விசாரிப்பதற்காக ஜெயவர்த்தன அரசாங்கம் பிரதான நீதியரசர் ஜே. ஏ. எல். குரே (Chief Justice J.A.L. Cooray) தலைமையிலான விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது. ஜூலை 25 மற்றும் ஜூலை 27 ஆகிய தேதிகளில் இரு கட்டங்களாக நடத்தப்பட்ட தாக்குதல்களில் குட்டிமணி, தங்கத்துரை உள்ளிட்ட 53 தமிழ் அரசியல் கைதிகள் சக சிங்களக் கைதிகளால் கொடூரமாக அடித்துக் கொல்லப்பட்டதை விசாரணைக்குழு உறுதிப்படுத்தியது. இந்தப் படுகொலைகள் தன்னிச்சையாக நடந்தவை அல்ல என்றும், சிறைச்சாலை அதிகாரிகளின் மறைமுக ஆதரவு மற்றும் திட்டமிடலுடன் அரங்கேற்றப்பட்டவை என்றும் குற்றம் சாட்டப்பட்டது.

எனினும், இந்த விசாரணைக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் படுகொலைக்கு காரணமான குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த தவறிவிட்டதாக சர்வதேச மனித உரிமை அமைப்புகளாலும் தமிழ் தரப்பாலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. இலங்கையின் வரலாற்றில் இந்தப் படுகொலையானது நீதித்துறையின் தோல்வியாகவும், சிறை வைக்கப்பட்டிருந்த கைதிகளுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டிய அரசாங்கத்தின் கடமை தவறிய நிகழ்வாகவும் இன்றும் பார்க்கப்படுகிறது.

அரசாங்கத்தின் இந்தப் பலவீனத்தின், தவறுகளின் விளைவாகத்தான் தொடர்ந்தும் சிறைச்சாலைகளில் வன்முறைகளும் படுகொலைகளும் நடந்து கொண்டேயிருக்கின்றன. ஆகவே அரசாங்கமே அனைத்து சிறைச்சாலைக் குற்றங்களுக்கும் முழுப்பொறுபேற்க வேண்டும். 1997 இல் களுத்துறை சிறைச்சாலையில் நடந்த வன்முறையில் மூன்று தமிழ் அரசியல் கைதிகள் பலியாகினர். 2000 இல் பிந்துனுவெவ மறுவாழ்வு முகாமில் நடந்த படுகொலைச் சம்பவத்தில் 26 தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இதில் 14 பேர் காயமடைந்தனர். 2012 நவம்பரில் வெலிக்கடை சிறைச்சாலை வன்முறையில் 27 கைதிகள் பலியாகினர். 40 பேர் காயமடைந்தனர். சிறைக்குள் சட்டவிரோத ஆயுதங்கள் மற்றும் போதைப்பொருட்களை தேடி பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் (STF) நடத்திய சோதனையின் போது மோதல் வெடித்தது. ஆயுதக் கிடங்கை உடைத்து கைதிகள் துப்பாக்கிச்சூடு நடத்தியதாகக் கூறப்பட்டாலும், பின்னர் கைதிகள் சிலரை பெயர் சொல்லி அழைத்து திட்டமிட்டு படுகொலை செய்ததாக சிறைச்சாலை அதிகாரி ஒருவருக்கு நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது.

2020 இல் மஹர சிறைச்சாலைக் கலவரம் நடந்தது. இதில் 11 கைதிகள் பலியாகினர். 117க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இப்பொழுது (2026 ஜூலையில்) நீர்கொழும்பு சிறைச்சாலை வன்முறை நடைபெற்றுள்ளது. இதில் 26 முதல் 29 பேர் வரை பலி (இதில் 7-8 சிறை அதிகாரிகள் அடங்குவர்), 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு தொடர்ந்து நடைபெறும் சிறைச்சாலை வன்முறைகள் அல்லது கொலைகளைப் பற்றி உள்நாட்டில் உள்ள அரசியற் கட்சிகள், மக்கள் அமைப்புகள், மனித உரிமையாளர்கள் தொடக்கம் சர்வதேச தரப்புகள் அனைத்தும் தொடர்ச்சியாகக் கண்டனங்களை தெரிவித்து வருகின்றன.

இதுவரையில் நடைபெற்ற சிறை வன்முறைகள், படுகொலைகளுக்கு இரண்டு காரணங்களே பிரதானமாகக் கூறப்படுகிறது. ஒன்று, இனவாத அடிப்படையில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்ற வன்முறைகளும் கொலைகளும். இதில் கொல்லப்படுவதும் பாதிக்கப்படுவதும் தமிழர்களாகவே இருக்கின்றனர் என்பதால்தான் இவற்றுக்கான நீதி விசாரணைகள் முறையாக நடத்தப்படுவதில்லை. இரண்டாவது, 10,000 பேர் மட்டுமே இருக்கக்கூடிய சிறைகளில் 40,000க்கும் அதிகமான கைதிகளை அடைத்து வைத்துள்ள நெருக்கடி நிலைமை (Overcrowding) ஆகும். இதற்கான மாற்றுத்திட்டங்களும் ஏற்பாடுகளும் அரசாங்கத்தினாலும் அதனுடைய நீதித்துறையினாலும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் முன்னர் நடந்த வன்முறைகள், கொலைச்சம்பவங்களையும் விட இறுதியாக நடந்த நீர்கொழும்புச் சிறை வன்முறையில் சிறை அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் பலியாகியுள்ளனர். இப்பொழுதுதான் அரசாங்கத்தின் கைகளில் நேரடியாகச் சூடு பட்டிருக்கிறது. ஆனாலும் NPP அரசாங்கம் அதைக் காட்டிக் கொள்வதற்குத் தயாராக இல்லை. வழமையைப்போல இந்த அரசாங்கமும் கதை விடல்களைச் செய்வதற்கே முற்படுகிறது.




இந்த நிலைமையை மாற்றுவதற்கு அரசாங்கம் முதன்மையாக இவற்றைக் குறித்து முழுமையான பகுப்பாய்வையும் விசாரணைகளையும் சரியாகச் செய்ய வேண்டும். இதுவரையிலான அவதானங்களின்படி, சிறைச்சாலைகளில் திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்ளப்படும் இனவாத அடிப்படையிலான கைதிகள் மீதான வன்முறை, பல ஆண்டுகளாக நிலவி வரும், அளவுக்கு அதிகமான கைதிகளின் நெருக்கடி, போதைப்பொருள் மாஃபியா மற்றும் பாதுகாப்புத்துறையினரின் துப்பாக்கிச்சூடுகள் போன்றவற்றின் காரணமாக பல பாரிய வன்முறைகளும் படுகொலைகளும் அரங்கேறியுள்ளன.

ஆகவே சிறைச்சாலை வன்முறைகள் தொடர்வதற்குக் காரணங்களாக வெறும் தற்காலிக மோதல்களை மட்டும் கூற முடியாது. இதன்பின்னால் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாத கட்டமைப்பு சார்ந்த பலவீனங்கள் பல காணப்படுகின்றன என்பது வெளிப்படையானது. தொடக்கத்திலேயே சரியான நீதி விசாரணைகளை மேற்கொண்டு, உரிய நடவடிக்கைளை மேற்கொண்டிருந்தால், பின்னர் வன்முறைகள் நடப்பதற்கான வாய்ப்புகள் குறைந்திருக்கும். மட்டுமல்ல, பாதிப்பும் குறைந்திருக்கும்.

இப்போது காணப்படுகின்ற பெரிய பிரச்சினை என்பது, சிறைகளின் உண்மையான கொள்ளளவை விட மூன்று அல்லது நான்கு மடங்கு அதிகமான கைதிகள் அடைக்கப்படுகின்றனர். போதைப்பொருள் குற்றவாளிகள், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பிணை கிடைக்காமல் நீண்டகாலமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளோரே இதில் பெரும்பகுதியினர். இந்த இடநெருக்கடியானது கைதிகளிடையே கடுமையான மன அழுத்தத்தையும், அதன் விளைவாக வன்முறையையும் தூண்டுகிறது. இதை வன்முறையைத் திட்டமிடும் தரப்பு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறது. நீர்கொழும்புச் சிறை வன்முறையின் முதற்கட்ட கள ஆய்வு விவரங்கள் இதையே தெரிவிக்கின்றன.

இதேவேளை சிறைச்சாலை உத்தியோகத்தர்களில் சிலரது ஊழல் போக்கும் அரசியல் ரீதியாக அவர்களுக்கு ஏற்படுகின்ற அழுத்தங்களும் சிறைக்குள் போதைப்பொருட்கள், ஆயுதங்கள் மற்றும் தொலைபேசிகள் தடையின்றிப் புழங்குவதற்கு வழிவகுக்கிறது. குற்றக் கும்பல்களின் தலைவர்கள் (Underworld) சிறைக்குள்ளிருந்தே தங்களது சாம்ராஜ்யத்தை நடத்த முடிகிறது. இது சிறைக்குள் குழு மோதல்களுக்கு வழிவகுக்கிறது. நீர்கொழும்பில் நடந்ததும் இது என்றே கூறப்படுகிறது.

சிறைச்சாலை வன்முறைகளைத் தடுப்பதற்கு பல வழிமுறைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். அது நீதிமன்றத் தீர்ப்புகள், சட்டத்திருத்தம் தொடக்கம் சிறைச்சாலை நடைமுறைகள் வரையில் உண்டு. சிறைச்சாலைகளில் நவீன கலவரத் தடுப்பு முறைகள், மனித உரிமைகள் விடயங்களைப் பற்றிய அறிவும் பொறுப்புணர்வும், உளவியல் ரீதியாகக் கைதிகளைக் கையாளுதல் போன்ற விடயங்களில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்குப் போதிய பயிற்சிகள் வழங்கப்படுவதில்லை. சிறை அதிகாரிகள் பல நூற்றாண்டுகளுக்கு முந்திய அதிகார மனோநிலையில்தான் காணப்படுகின்றனர். அந்த நிர்வாக முறைமையும் ஏறக்குறைய அப்படித்தான் உள்ளது. இதனால் வன்முறைகள் வெடிக்கும் போது, அவர்கள் நிலைமையைக் கட்டுப்படுத்த துப்பாக்கிச் சூடு போன்ற அதீத பலப்பிரயோகத்தை நாடுவது மரணங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கிறது.

இதில் கவலைக்குரிய வெட்கக்கேடான விடயம் என்னவென்றால், நடந்தவை பற்றி எந்தப் படிப்பினையையும் அரசாங்கம் கொள்வதே இல்லை. நடைபெற்று முடிந்த போரில் இடம்பெற்ற குற்றங்களாக இருந்தாலும் சரி, இதற்கு முன்னான வன்முறைகள், மனித உரிமை மீறல் சம்பவங்களாக இருந்தாலும் சரி, எதனையும் அரசாங்கம் படிப்பினையாகக் கொள்வதில்லை. அவற்றுக்குப் பொறுப்புக் கூறுவதுமில்லை. அதனுடைய தொடர்ச்சியே தொடர் வன்முறைகளும் குற்றச் செயல்களுமாகும்.

குறிப்பாகக் கடந்த காலங்களில் நடைபெற்ற சிறைச்சாலை படுகொலைகள் தொடர்பாகப் பல விசாரணை ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்ட போதிலும், அவற்றின் பரிந்துரைகள் முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. குற்றமிழைத்த அதிகாரிகள் அல்லது கைதிகள் தண்டிக்கப்படாமை "தண்டனையின்றித் தப்பிக்கும் கலாசாரத்தை" (Culture of Impunity) உருவாக்கியுள்ளது. இது குற்றமிழைக்கும் உளநிலையையும் அதற்கான சூழலையும் ஊக்குவித்துள்ளது. இதன் விளைவுகளையே இன்று நாடும் அரசாங்கமும் சந்திக்க வேண்டி வந்திருக்கிறது.

ஜனநாயக நாட்டில், சிறைச்சாலை வன்முறைகள் மற்றும் கைதிகளின் மரணங்கள் தொடர்கின்றபோது, அதற்கான முதன்மைப் பொறுப்பு அரசாங்கத்திற்கும் அதன் ஒரு முக்கிய அங்கமான நீதி அமைச்சுக்குமே உரியதாகும். அரசியல் அமைப்பின் படியும், சர்வதேச சட்டங்களின் படியும் குடிமக்களின் (அவர்கள் கைதிகளாக இருந்தாலும்) பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் கடமையாகும். இலங்கை அரசியலமைப்பின் 11 வது உறுப்புரையின்படி, "எவரும் சித்திரவதைக்கு அல்லது கொடூரமான, மனிதநேயமற்ற அல்லது அவமதிப்பான நடாத்துகைக்கு அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படலாகாது." சிறை வன்முறைகளும், அங்கு நிலவும் மோசமான சுகாதாரச் சூழலும் இந்த அடிப்படை உரிமையை மீறுவதாக அமைகின்றன. இதற்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும்.


கைதிகள் தங்களின் நடமாடும் சுதந்திரத்தை இழந்திருந்தாலும், அவர்களின் உயிர் வாழும் உரிமை (Right to Life) மற்றும் பாதுகாப்புக்கான உரிமை என்பன அரசாங்கத்தின் கைகளிலேயே ஒப்படைக்கப்பட்டுள்ளன. எனவே, சிறைக்குள் நடக்கும் ஒவ்வொரு அசம்பாவிதத்திற்கும் அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும்.

1983 வெலிக்கடை படுகொலை முதல் அண்மைய மோதல்கள் வரை, வன்முறைகளில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களோ அல்லது கைதிகளோ தகுந்த முறையில் தண்டிக்கப்படவில்லை என்ற பொதுவான விமர்சனம் உள்ளது. அரசாங்கம் குற்றவாளிகளைக் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிப்பதன் மூலமே, இத்தகைய வன்முறைகள் எதிர்காலத்தில் தொடராமல் தடுக்க முடியும். அடுத்ததாக, சிறைச் சாலைகளை தண்டிக்கும் இடமாகப் பார்க்காமல், கைதிகளைப் புனர்வாழ்வளித்து நல்வழிப்படுத்தும் (Rehabilitation) நிலையங்களாக மாற்ற வேண்டும். நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி (CCTV, ஜாமர்கள் - Jammers) சிறைகளின் பாதுகாப்பை பலப்படுத்துவதோடு, ஊழல்வாதிகளுக்கு கடுமையான தண்டனை வழங்க வேண்டும்.

சிறைச்சாலைகள் திணைக்களம் (Department of Prisons) நேரடியாக நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் கீழேயே இயங்குகிறது. எனவே, இந்த நெருக்கடியைத் தீர்ப்பதில் இந்த அமைச்சுக்கு நேரடி மற்றும் உடனடி கடப்பாடுகள் உள்ளன. சிறைகளில் உள்ளோரில் பெருமளவானோர் தண்டனை பெற்ற குற்றவாளிகள் அல்ல, மாறாக விசாரணைகளை எதிர்கொள்ளும் விளக்கமறியல் கைதிகளாவர். நீதி அமைச்சு, பொலிஸ் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இணைந்து, தேவையற்ற கைதுகளைக் குறைக்கவும், சிறு குற்றங்களுக்குப் பிணை வழங்குவதை எளிதாக்கவும் சட்டத் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும். போதைப் பொருள் பாவனையாளர்களைக் குற்றவாளிகளாகப் பார்த்துச் சிறையில் அடைப்பதற்குப் பதிலாக, அவர்களை நோயாளிகளாகக் கருதி புனர்வாழ்வு அளிப்பதற்கான பிரத்தியேக சட்டக் கட்டமைப்பை நீதி அமைச்சு வலுப்படுத்த வேண்டும்.

பழைய, பாழடைந்த சிறைச்சாலைகளுக்குப் பதிலாக, போதிய இடவசதி மற்றும் நவீன வசதிகளைக் கொண்ட புதிய சிறைச்சாலை வளாகங்களை அமைப்பது அமைச்சின் கடமையாகும். சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்குக் கைதிகளைக் கையாள்வது குறித்தும், கலவரச் சூழலை அதீத பலப்பிரயோகம் (துப்பாக்கிச் சூடு) இன்றி எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது குறித்தும் சர்வதேச தரத்திலான பயிற்சிகளை நீதி அமைச்சு வழங்க வேண்டும். நன்னடத்தைக் கைதிகள் தங்களது தண்டனைக் காலத்தின் ஒரு பகுதியை நிறைவு செய்ததும், நிபந்தனையுடனான விடுதலையின் (Parole) கீழ் சமூகத்திற்குள் திரும்ப அனுமதிக்கப்பட வேண்டும். அத்துடன், வயதான மற்றும் தீராத நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ள கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கி விடுவிக்கலாம்.

இவைபோன்ற நடவடிக்கைகளும் முழுமையான மறுசீரமைப்புமே சிறைச்சாலை வன்முறைகளை இல்லாதொழிக்கும். அரசாங்கம் எல்லாத் தளங்களிலும் மறுசீரமைப்பையும் சுத்தப்படுத்தல்களையும் செய்ய வேண்டும். அதைச் செய்யாத வரையில் இத்தகைய சீரழிவுகளும் தலைகுனிவுகளும் நெருக்கடிகளும் கீழ்மைகளுமே நிகழும். NPP அரசாங்கமும் பழைய கழுதையிலேயே பயணம் செய்ய விரும்புவதால் மாற்றங்கள், திருத்தங்களை எளிதில் எதிர்பார்க்க முடியாதென்பது வரலாற்றின் - நிஜ நிலைமைகளின் துயரமாகும்.



# எதிர்ப்பக்கம்

### செழியன் - உலகசினிமாவை ஊரறியச் செய்தவன்

உலக சினிமா ரசிகர்களுக்கு செழியன் ஒரு மறக்க முடியாத பெயர். தமிழ் ரசிகர்களுக்கும், இளம் படைப்பாளிகளுக்கும் உலக சினிமாவின் கதவுகளைத் திறந்து வைத்த பெருமை செழியனையே சாரும். ஆனந்த விகடனில் அவர் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பான 'உலக சினிமா' புத்தகம், வெறும் நூல் அல்ல. அது உலகளாவிய மாஸ்டர்களின் காட்சி மொழியையும், திரைக்கதை நுட்பங்களையும் மிக எளிய தமிழில் அவர் விவரித்த விதம், பல உதவி இயக்குநர்களின் பைபிளாக இன்றும் விளங்குகிறது.

தமிழ் சினிமாவில் அசல் தன்மையோடு கூடிய காட்சிக் கவிதைக்கு இலக்கணம் வகுத்தவர் செழியன். 'கல்லூரி', 'பரதேசி' போன்ற படங்களில் அவரது கேமரா லென்ஸ் ,மனிதர்களின் ஆன்மாவை உற்று நோக்கியது.அவர் இயக்கிய 'டூலெட்' (To Let) திரைப்படம் தமிழ் சினிமாவின் சர்வதேச முகவரியாக மாறியது. சென்னை மாநகரத்தின் வாடகை வீட்டுப் பிரச்சினையை, எவ்வித வணிக சமரசங்களும் இன்றி, பின்னணி இசை கூட இல்லாமல் மிக எதார்த்தமாகப் பதிவு செய்தார். இப்படம் இந்திய அரசின் தேசிய விருதைப் பெற்றதோடு, சர்வதேசத் திரைப்பட விழாக்களிலும் பல விருதுகளைக் குவித்து, தமிழ் மண்ணின் கதையை உலக அரங்கில் கம்பீரமாக நிறுத்தியது.

சினிமாவை முறைப்படி கற்க விரும்பும் அடித்தட்டு மாணவர்களுக்காக 'த பிலிம் ஸ்கூல்' (The Film School) என்ற திரைப்பட அமைப்பை உருவாக்கி,உலகத் தரம் வாய்ந்த திரைப்படக் கல்வியை, வணிக நோக்கமின்றி அடுத்த தலைமுறைக்குக் கடத்த அவர் எடுத்த இந்த முயற்சி, ஆரோக்கியமான சினிமாவுக்கான விதை.வெறும் தொழில்நுட்பக் கலைஞராக மட்டுமில்லாமல், தமிழ் சினிமாவின் ரசனையைச் செப்பனிட்ட ஒரு பண்பாட்டுக் குறியீடாக விளங்கிய செழியனின் திடீர் மறைவு தமிழ் கூறும் திரைப்பட உலகிற்குப் பெரும் அதிர்ச்சி. ஒளிப்பதிவாளர், இயக்குநர், எழுத்தாளர் எனப் பன்முகத் தன்மையோடு தமிழ் சினிமாவின் ரசனையை உலகத் தரத்திற்கு உயர்த்திய செழியனின் மறைவு, ஒட்டுமொத்த தமிழ்த் திரை உலகிற்கும் ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்.

### ரீல்ஸ் எடுத்தவன் ரீல்ஸால் அழிவான்

கத்தி எடுத்தவன் கத்தியால் அழிவான் என்பது நமக்கு தெரியும் தானே. இப்பொழுதுள்ள சமூக ஊடக காலத்தில் ரீல்ஸ்கள் நமது வாழ்வினை முழுமையாக ஆக்கிரமித்திருக்கின்றன அல்லவா? நாமும், நமது குழந்தைகளும் சமூக ஊடகங்களில் ஏதோ ஒரு வகையில் நமது நேரத்தை செலவிட்டுக்கொண்டே இருக்கின்றோம். கடந்த 2026 சட்டமன்றத் தேர்தலில் தவெக ஆட்சியைப் பிடித்ததற்கு, அக்கட்சியினர் சமூக வலைத்தளங்களில் நடத்திய 'ஸ்மார்ட்' பிரசாரமும், குறிப்பாக 'ரீல்ஸ்' (Reels) வீடியோக்களும் மிக முக்கியக் காரணியாக இருந்தன என்பது நமக்கு தெரியும் தானே.. ஆனால், இன்று அதே ரீல்ஸ் ஆயுதம் முதல்வர் விஜய் தலைமையிலான தவெக அரசுக்குப் பெரும் தலைவலியாகவும், வில்லனாகவும் மாறியிருக்கிறது. ஆனால், தற்போதைய தவெக அமைச்சர்களும், நிர்வாகிகளும் அரசுப் பணிகளிலும் அதே ரீல்ஸ் மோகத்தைத் தொடர்வது மக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தி வருகிறது.

சமீபத்தில் அரசுப் பள்ளி ஒன்றுக்குச் சென்ற அமைச்சர் கீர்த்தனா, அங்கிருந்த மாணவியிடம் அதிகாரத் தோரணையில் கைகட்டச் சொல்லி ஆங்கிலத்தில் பேச வைத்த ரீல்ஸ் வீடியோ பெரும் கண்டனத்திற்கு உள்ளானது. முன்னதாக, தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கும் அவர் வெளியிட்ட ரீல்ஸ் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தது. தவெக அரசுக்கு மிகப்பெரிய நெருக்கடியைக் கொடுத்தது அமைச்சர் சரத்குமாரின் வீடியோதான். கிரிக்கெட் போட்டியின் போது செல்போனில் ஏதோ ஒரு மாத்திரையைத் தூ ளாக்கும் அவரது ரீல்ஸை, எதிர்க்கட்சியான திமுக 'போதைப்பொருள்' என்று விமர்சித்து மாநிலம் தழுவிய போராட்டங்களை நடத்தியது. "குழந்தைக்கு மாத்திரை உடைத்தேன்" என்று அவர் விளக்கமளித்தாலும் அது அரசுக்குத் தர்மசங்கடத்தையே தந்தது.

ஆட்சி அமைந்த முதலே தவெக நிர்வாகிகள் அரசு மருத்துவமனைகள், பள்ளிகள், தாலுகா அலுவலகங்கள் எனப் புகுந்து 'திடீர் ஆய்வு' என்ற பெயரில் ட்ரோன் கமராக்கள், பின்னணி இசையோடு ரீல்ஸ் போடத் தொடங்கினர். இது நிர்வாகச் சீர்குலைவை ஏற்படுத்துவதாகப் புகார்கள் எழுந்ததால், கட்சி நிர்வாகிகள் யாரும் ஆய்வுகளில் ஈடுபடக் கூடாது என்று அமைச்சர் ஆனந்த் உத்தரவிட்டார்.இருப்பினும், போலியோ சொட்டு மருந்து முகாம்களில் ஆய்வு செய்வது, அரசுப் பள்ளிகளில் முதல்வர் விஜயின் படங்களை மாட்டி ரீல்ஸ் போடுவது என நிர்வாகிகளின் ஆர்வக்கோளாறு இன்னும் ஓய்ந்தபாடில்லை. அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ் கோயில்களில் முறுக்கின் தயாரிப்புத் திகதியைக் கேட்டு தடதடத்த ரீல்ஸ்கள், கனிமவளத் துறை அமைச்சரின் குவாரி ட்ரோன் ரீல்ஸ்கள் என அனைத்தும் தவெகவின் இமேஜை டமேஜ் செய்து வருகின்றன.

இதற்கெல்லாம் உச்சமாக, அரசு மருத்துவமனைகளுக்குள் புகுந்து அரசியல் கட்சியினர் ரீல்ஸ் எடுப்பது நோயாளிகளுக்கும் மருத்துவர்களுக்கும் பெரும் இடையூறாக மாறியுள்ளது. இதைக் கண்டித்து திருச்சி ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில் மருத்துவர்களும், செவிலியர்களும் போராட்ட களத்தில் குதித்துள்ளனர். இது எங்கு போய் முடியும் என்பது தெரியவில்லை. அவர்களின் முதிர்ச்சியின்மையும், லைக்குகளை வாங்கவேண்டும் என்ற மோகமும் அவர்களை சிறுப்பிள்ளைகள் போல் ஆட்டிவைக்கிறது. அதனால் தான் சொல்கிறேன் ரீல்ஸ் எடுத்தவன் ரீல்ஸால். ?

### எல்லாக்காலத்திலும் சிறந்தவன் அவன்

யூரோ 2024 போட்டிகளின் முடிவில் போர்த்துக்கல் அணி தோல்வியுற்று ரொனால்டோவின் மற்றொரு கோப்பையை வெல்லும் கனவை முடிவுக்குக் கொண்டு வந்தபோது நான் எதிரொலியில் ஒரு கட்டுரை எழுதியிருந் தேன். அந்தக் கட்டுரையில், மெஸ்ஸியையும் ரொனால்டோ வையும் மொஸார்ட் மற்றும் சலேரியுடன் ஒப்பிட்டிருந்தேன். நீங்கள் 'அமதியஸ்' திரைப்படத்தைப் பார்க்கவில்லை என்றால் தயவுசெய்து அதைப் பார்த்துவிடுங்கள். தொடர்ந்த பயிற்சிகளின் மூலம் விற்பன்னர்களானவர்கள் இயற்கையினால் ஆசீர்வாதம் பெற்றவர்களை ஏன் தோற் கடிக்க முடியாது என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள். அந்த திரைப்படத்தில் சலேரி தொடர்ந்து சிம்பொனி எழுதுவார் ,மூளையினைப் பிழிந்து ஏதேதோ இசைக்கோர்வைகளை படைப்பார். ஆனால் மொசார்ட்டின் இசை முன்னே அது பிசுபிசுத்து போய்விடும்.இயற்கையின் கருணை செய்யும் வேலை அது.

இதே ஒப்பீடு மெஸ்ஸி மற்றும் ரொனால்டோவுக்கும் பொருந்தும். நீங்கள் எவ்வளவு கடினமாகப் பயிற்சி செய்து சிறப்பாகச் செயற்பட்டாலும், இயற்கையின் முன் நீங்கள் சரணடைய வேண்டியிருக்கும். இயற்கை மெஸ்ஸியை மிகச்சிறந்தவராகத் தேர்ந்தெடுத்துள்ளது. அர்ஜெண்டினா- எகிப்து அணிக்கு இடையேயான காலிறுதிக்கு முந்திய ஆட்டத்தை நீங்கள் பார்த்திருந்தால், இரு அணிகளுக்கும் இடையிலான ஒரே வித்தியாசம் லியோனல் மெஸ்ஸி மட்டும் தான்.

அவர் களத்தில் இருந்தால், அர்ஜென்டினா அணி தங்களால் வெற்றி பெற முடியும் என்று நம்புகிறது. இறுதியில் அவர்கள் வெற்றியும் பெற்றனர். எகிப்து அணியின் தேவையற்ற நடிப்புகளைப் பார்ப்பது எரிச்சலூ ட்டியது. வலிமைமிக்க மெஸ்ஸி அணிக்கு எதிராக 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றிருந்தபோது, நீங்கள் ஏன் அவநம்பிக்கையுடன் விளையாட வேண்டும் ? . ஏன் அதே பழைய 4 தடுப்பாட்டக்காரர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தீர்கள்? நீங்கள் 5 தடுப்பாட்டக்காரர்களைக் கொண்ட இங்கிலாந்து அணியின் மேலாளர் செய்தது போன்று டுச்செல் அணுகுமுறையைப் பின்பற்றி ஆட்டத்தை உயிர்ப்புடன் தற்காத்திருக்க வேண்டும். ஆனால் நீங்கள் உங்களை நம்பாமல் நடிப்பினை தேர்ந்தெடுத்து படுதோல்வி அடைந்துவிட்டீர்கள். நடுவரின் சில கேள்விக்குரிய முடிவுகள் உள்ளன என்பது எனக்குத் தெரியும், ஆனால் கடைசி 10 நிமிடங்களில் 3 கோல்கள் வாங்கி தோற்றதற்காகப் புகார் செய்ய எந்தக் காரணமும் இல்லை. எகிப்தின் தோல்விக்கு பயிற்சியாளர் பொறுப்பேற்க வேண்டும்.

மெஸ்ஸி ஏன் எல்லா காலத்திலும் சிறந்தவர் என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்துவிட்டார் என்றே சொல்ல வேண்டும்.

### ஆதர்சங்கள் ஓய்வு பெறும் காலம்

சர்வதேச கால்பந்து அரங்கில் ஒரு பொற்காலம் முடிவுக்கு வருகிறது. இவ்வளவு காலமும் ரசிகர்களை தங்கள் விளையாட்டுத் திறனால் வசியப்படுத்திய மாபெரும் ஜாம்பவான்களான லூகா மோட்ரிச், நெய்மர் ஜூனியர், கிறிஸ்டியானோ ரொனால்டோ, கெவின் டி புரூய்ன், மற்றும் ஜேம்ஸ் ரோட்ரிக்ஸ் தங்களது விளையாட்டுப் பயணத்தை நிறுத்திக்கொள்வதாக அறிவித்திருக்கிறார்கள். இது கால்பந்து ரசிகர்களுக்கு அதிர்ச்சி தரக்கூடிய செய்திதான்.

கிறிஸ்டியானோ ரொனால்டோ (போர்த்துக்கல்) - போர்த்துக்கல் நாட்டின் முகவரியை மாற்றியவர் ரொனால்டோ. சர்வதேச கால்பந்து வரலாற்றில் அதிக கோல்கள் (130-க்கும் மேல்) அடித்த வீரர் என்ற அசாத்திய சாதனைக்கு சொந்தக்காரர். 2016-ல் போர்ச்சுகல் நாட்டிற்கு முதன்முறையாக Euro Cup கோப்பையையும், 2019-ல் Nations League கோப்பையையும் வென்று தந்தார். ஐந்து உலகக் கோப்பைகளில் கோல் அடித்த ஒரே வீரர். போர்த்துக்கல் அணியை உலக அரங்கில் ஒரு அச்சுறுத்தலான அணியாக மாற்றிய அவரது அசாத்திய உழைப்பும், 'நம்பர் 7' ஜெர்சியும் கால்பந்து உள்ளவரை பேசப்படும்.

லூகா மோட்ரிச் (குரோஷியா) - மிகச்சிறிய நாடான குரோஷியாவை உலகக் கோப்பையின் இறுதிப்போட்டி வரை அழைத்துச் சென்ற மாயாஜால மிட்பீல்டர் (Midfielder).2018 உலகக் கோப்பையில் குரோஷியாவை இரண்டாம் இடத்திற்கும், 2022-ல் மூன்றாம் இடத்திற்கும் வழிநடத்தி, 2018-ன் சிறந்த வீரருக்கான Golden Ball மற்றும் Ballon d'Or விருதுகளை வென்றார். மைதானத்தை ஆளுகை செய்யும் அவரது துல்லியமான பாஸ்கள் (Passes) மற்றும் முதிய வயதிலும் குறையாத வேகம். குரோஷிய கால்பந்தின் பொற்கால நாயகன் அவர்தான்.

நெய்மர் ஜூனியர் (பிரேசில்) - பிரேசிலிய கால்பந்தின் பாரம்பரிய அழகியலையும், 'ஜோகா பொனிட்டோ' (Joga Bonito) பாணியையும் பிரதிபலித்தவர் நெய்மர். பிரேசில் வரலாற்றில் மாபெரும் ஜாம்பவான் பீலேயின் (Pelé) கோல் சாதனையை முறியடித்து, பிரேசில் நாட்டின் அதிக கோல் அடித்த வீரர் என்ற வரலாற்றுப் பெருமையைப் பெற்றார். 2016 ஒலிம்பிக்கில் தங்கம் வென்று தந்தார். அவரது அசாத்தியமான டிரிப்ளிங் (Dribbling) திறமையும், எதிரணிகளை நிலைகுலையச் செய்யும் விளையாட்டுப் பாணியும் ரசிகர்களை என்றும் பரவசத்தில் வைத்திருக்கும்.



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

கெவின் டி புரூய்ன் (பெல்ஜியம்) - பெல்ஜியம் கால்பந்தின் 'பொற்காலத் தலைமுறை' (Golden Generation) கண்ட ஆகச்சிறந்த மிட்பீல்ட் மேதை.

2018 உலகக் கோப்பையில் பெல்ஜியம் அணி வரலாற்றி லேயே முதல் முறையாக மூன்றாம் இடம் பிடிப்பதற்குக் காரணமாக இருந்தார். பல ஆண்டுகள் பெல்ஜியத்தை உலகத் தரவரிசையில் முதலிடத்தில் நீடிக்கச் செய்தார்.கணினியை விடத் துல்லியமாக மைதானத்தின் இடைவெளிகளைக் கண்டறிந்து அவர் கொடுக்கும் 'அசிஸ்ட்கள்' (Assists) கால்பந்து உத்திகளின் உச்சம்.

ஜேம்ஸ் ரோட்ரிக்ஸ் (கொலம்பியா) - கொலம்பிய கால்பந்தின் நவீன அடையாளமாகத் திகழ்ந்தவர் ஜேம்ஸ் ரோட்ரிக்ஸ். 2014 உலகக் கோப்பையில் 6 கோல்கள் அடித்து Golden Boot விருது வென்றார். குறிப்பாக உருகுவே அணிக்கு எதிராக அவர் அடித்த 'வொலி' (Volley) கோல் உலகக் கோப்பை வரலாற்றின் மிகச்சிறந்த கோல்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.கொலம்பிய தேசத்தின் கால்பந்து ஆர்வத்தை உலகறியச் செய்த அவரது மாயாஜால இடதுகால் ஆட்டமும், அந்த மறக்க முடியாத 2014 உலகக் கோப்பைத் தருணங்களும் அவரை வரலாற்றில் அழியாதவராக்குகிறது.

### கணித மேதை - நரேந்திர மோடி

சமீப நாட்களில் பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் கணிதத் திறமையைக் கண்டு உலகமே வியந்து வருகிறது. அவர் சுற்றுப்பயணம் செல்லும் நாட்களில் சிக்கலான அரசியல் ராஜதந்திர விஷயங்களை எளிய கணித சூத்திரங்கள் கொண்டு விளக்குவதை கண்டு உலகமே அஞ்சி நடுங்குகிறது. இந்த நிலை இப்படியே தொடர்ந்தால் கணித மேதை ராமானுஜனை தனது கணித அறிவியலில் விஞ்சி விடுவார் என்றே தோன்றுகிறது.மோடி பல்வேறு உலக மேடைகளில் தெறிக்கவிட்ட சில முக்கியமான 'கணித ராஜதந்திர' சமன்பாடுகளைப் பற்றி நாம் பார்க்கலாம்.

### "எட்டுக்குள்ள வாழ்க்கை இருக்கு"

ஜகார்த்தாவில் வசிக்கும் இந்தியப் புலம்பெயர்ந்தோர் மத்தியில் உரையாற்றிய போது, இந்தோனேசிய அதிபர் பிரபோவோ சுபியாண்டோவை மேடையில் வைத்துக்கொண்டே மோடி இந்த எண்களின் விளையாட்டை ஆரம்பித்தார். இந்தியாவின் குடியரசு தினமான ஜனவரி 26-ன் இலக்கங்களைக் கூட்டி 2 + 6 = 8 என்றும், அதிபர் சுபியாண்டோவின் பிறந்த திகதியான ஜனவரி 17-ன் இலக்கங்களைக் கூட்டி 1 + 7 = 8 என்றும் தனது கூட்டல் திறமையை எல்லோருக்கும் தெரியப்படுத்தினார்.

### "ஒன்றும் ஒன்றும் சேர்ந்தால் பதினொன்று"

தற்போதைய அரசுமுறை பயணத்தின் போது மெல் போர்ன் வந்த பிரதமர், இருதரப்பு உறவுகளின் பலத்தை வரையறுக்க மோடி ஒரு புதிய லாஜிக்கைப் பயன்படுத்தி னார்."கணிதப்படி 1 + 1 = 2 தான். ஆனால், ஒன்றுடன் ஒன்று சேர்ந்தால் அது 11 ஆக மாறும்"என்று அவர் குறிப்பிட்டார். அதாவது, இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் தனித்தனியாகச் செயல்படுவதை விட, ஒன்றாக இணையும்போது அவற்றின் கூட்டு சக்தி பன்மடங்காக உயர்கிறது என்பதை இந்தச் சூத்திரம் மூலம் விளக்கி ராஜதந்திரிகளை அசத்தினார்.

### இயற்கணித மேதை

முன்னதாக கனடாவிற்குப் பயணம் மேற்கொண்டிருந்த போது, மோடி மேடையில் சட்டென்று (a + b)^2 என்ற உலகப் புகழ்பெற்ற இயற்கணித (Algebra) சூத்திரத்தைக் கையில் எடுத்தார். இரு நாடுகளும் கூட்டாக ஒத்துழைக்கும் போது ஒரு கூடுதல் ஆற்றல் உருவாகிறது என்று குறிப்பிட்ட அவர், அந்தச் சூத்திரத்தில் வரும் "கூடுதல் 2ab" எங்கிருந்து வருகிறது என்று விளையாட்டுத்தனமாகக் கேட்டு அங்கிருந்தவர்களை வியப்பில் ஆழ்த்தினார்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக மோடி யின் கணித ஆற்றல் எல்லையற்று வளர்ந்து வருகிறது. ஆகவே தமிழ் கூறும் மக்கள் அனைவரும் தங்கள் குழந்தைகள் கணிதபாடத்தை பிடிக்கமுடியவில்லை என்று கஷ்டப் பட்டால் அவர்களுக்கு நமது பிரதமரின் கணித காணொளி களை போட்டு காட்டவும். கண்டிப்பாக விரைவில் கணித மேதைகளாகி விடுவர்.


XD
XDream Jewellery
Manufacturers & Importers of Modern Styles in 22K (916) Solid Gold
Where Tradition Meets Timeless Luxury
Discover gold jewellery, designed to sparkle for generations.
22K & 24K Pure Gold – Exquisite Designs, Unmatched Craftsmanship
Cash When You Need It
Trust You Can Count On
Bring your gold Top Dollar Paid
Safe & Secure • Same-Day Service
02 8677 4490
xdreamjewellery.com.au
08xdream@gmail.com
8 Aurelia St,
Toongabbie NSW 2146

# மெல்பேர்னில் மோடிக்கு வரவேற்பா, எதிர்ப்பா? ஆஸ்திரேலிய ஜனநாயகத்தின் இரு முகங்கள்!

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

"ஒரே நாளில், ஒரே அரங்கில் அரங்கேறிய இருவேறு காட்சிகள் - உள்ளே இந்திய வம்சாவளியினரின் பிரமாண்ட வரவேற்பு வெளியே 'Modi Go Home' முழக்கம்! இது ஆஸ்திரேலிய கருத்துச் சுதந்திரத்தின் அசல் அடையாளம்."

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் மெல்பேர்ன் பயணம், இருதரப்பு உறவுகளின் புதிய அத்தியாயமாக மட்டுமன்றி, உலக அரங்கில் புலம்பெயர் அரசியலின் அதிர்வுகளைக் காட்டும் ஒரு முக்கியமான மைல்கல்லாகவும் மாறியுள்ளது. மெல்பேர்னின் புகழ்பெற்ற மார்வெல் அரங்கத்தில் திரண்ட ஆயிரக்கணக்கான இந்திய வம்சாவளியினர், அவருக்குப் பிரமாண்டமான முறையில் தங்களது வரவேற்பை அள்ளி வீசினர். தொழில்நுட்பம், மருத்துவம், கல்வி எனப் பல துறைகளில் ஆஸ்திரேலிய மண்ணில் முத்திரை பதித்து வரும் இந்தியர்களுக்கு, மோடியின் வருகை வெறும் அரசியல் சந்திப்பாக இல்லாமல் தங்களின் தேசிய அடையாளத்தையும் கலாசாரப் பெருமையையும் பறைசாற்றும் விழாவாக அமைந்தது. உலக அரங்கில் இந்தியாவின் பொருளாதார எழுச்சியையும், உயர்ந்த அந்தஸ்தையும் பெருமிதத்தோடு அவர்கள் மோடியின் வழியே கொண்டாடித் தீர்த்தனர்.

### அரங்கிற்கு வெளியே எழுந்த 'Modi Go Home' முழக்கம்!

ஆனால், மார்வெல் அரங்கிற்குள் வீசிய அதே வரவேற்புக் காற்று, அதற்கு வெளியிலிருந்த சூழலை அத்தனை எளிதாகக் கடந்துவிடவில்லை. அரங்கிற்கு வெளியே திரண்ட ஆஸ்திரேலியாவின் குடியேற்ற எதிர்ப்பு அமைப்பினர், "Modi Go Home" (மோடியே வீட்டுக்குத் திரும்புங்கள்) என்ற அதிரடி முழக்கங்களுடன் கடுமையான போராட்டங்களை முன்னெடுத்தனர். இந்தப் போராட்டம் வெறும் தனிநபர் எதிர்ப்பாக இல்லாமல், ஆஸ்திரேலியா தற்போது எதிர்கொண்டு வரும் கடுமையான வீட்டு வசதி நெருக்கடி, வேலைவாய்ப்புப் போட்டி, வாழ்க்கைச் செலவின உயர்வு மற்றும் உள்கட்டமைப்பு அழுத்தங்கள் ஆகியவற்றுக்குக் குடியேற்றக் கொள்கையே காரணம் எனச் சாடி உருவானது. குறிப்பாக, இந்தியாவிலிருந்து வரும் மாணவர்கள் மற்றும் திறமையான தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால், தங்களின் குடியேற்ற எதிர்ப்புப் பிரசாரத்திற்குப் பிரதமர் மோடியின் வருகையை அவர்கள் ஒரு சர்வதேச விளம்பர மேடையாகப் பயன்படுத்திக் கொண்டனர்.








### ஆஸ்திரேலிய ஜனநாயகத்தின் அழகான முரண்பாடு

ஒரு நாட்டின் பிரதமர் வருகை தரும் நாளில், ஒரே இடத்தில் ஆயிரக்கணக்கானோர் அவரைத் தலைமேல் தூக்கிக் கொண்டாடுவதும், அதேவேளை மற்றொரு குழுவினர் அவருக்கு எதிராகப் பதாகைகளை ஏந்தி அமைதியாகப் போராடுவதும் ஒரு முதிர்ச்சியடைந்த ஜனநாயகத்தின் ஆரோக்கியமான வெளிப்பாடாகும். ஆஸ்திரேலிய அரசியல் அமைப்பு வழங்கியுள்ள கருத்துச் சுதந்திரம் மற்றும் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்யும் உரிமை ஆகியவற்றின் அசல் முகத்தை மெல்பேர்ன் வீதிகள் அன்று உலகிற்குக் காட்டின. வன்முறையின்றித் தத்தமது கருத்து முரண்பாடுகளை வெளிப்படுத்தும் இந்த அரசியல் கலாசாரம் உலக அரங்கிற்கு ஒரு சிறந்த பாடம்.

மறுபுறம், இந்த உள்நாட்டுப் போராட்டங்களால் இந்தியா-ஆஸ்திரேலியா இடையிலான கேந்திரிய மற்றும் வெளியுறவுக் கொள்கைகளில் எவ்வித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. இந்தோ-பசுபிக் பிராந்தியப் பாதுகாப்பு, கடல்சார் ஒத்துழைப்பு, வர்த்தகம், முக்கியமான கனிம வளங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் என இரு நாடுகளும் மிக நெருங்கிய இணக்கமான பாதையிலேயே பயணித்து வருகின்றன.

### சமூக ஊடகப் போரும் புலம்பெயர் சமூகத்தின் சவால்களும்

மைதானத்தின் விவாதங்கள் அப்படியே சமூக ஊடகங்களுக்கும் பரவி, இணையப்பக்கங்களை அனல் பறக்க வைத்தன. ஒருபுறம் #ModiInMelbourne போன்ற ஆதரவுக் குறியீடுகளும், மறுபுறம் #ModiGoHome போன்ற எதிர்ப்புக் குறியீடுகளும் உலகளவில் ட்ரெண்ட் ஆகி விவாதப் பொருளாகின. இருப்பினும், குடியேற்றம் குறித்த இத்தகைய அரசியல் விவாதங்கள் தீவிரமடையும் போது, ஆஸ்திரேலிய மண்ணில் வியர்வை சிந்தி அந்நாட்டுப் பொருளாதாரத்தை உயர்த்தும் புலம்பெயர் இந்தியச் சமூகம் தேவையற்ற முறையில் சர்ச்சைகளுக்குள் இழுக்கப்படும் அபாயமும் உள்ளது.

ஜனநாயகத்தின் வலிமை என்பது அனைவரும் ஒரே ராகம் பாடுவதில் இல்லை மாறாக, முரண்பட்ட குரல்களையும் வன்முறையின்றி வெளிப்படுத்த இடமளிப்பதில்தான் உள்ளது. மெல்பேர்னில் நிகழ்ந்த இந்த இருவேறு காட்சிகள், உலகமயமாக்கப்பட்ட இன்றைய காலத்தில் தேசிய அரசியலும், புலம்பெயர் சமூகத்தின் எழுச்சியும், ஜனநாயக உரிமைகளும் எவ்வாறு ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்துள்ளன என்பதை உணர்த்தும் ஒரு வரலாற்றுத் தருணமாகப் பதிவாகியுள்ளது.

# ஆஸ்திரேலியா மீட்டளித்த இந்தியப் பழங்காலச் சிலைகள்



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் ஆஸ்திரேலியப் பயணத்தின் போது, மூன்று முக்கியமான பண்டைய இந்தியக் கலைப்பொருட்களை மீண்டும் இந்தியாவிற்கு வழங்க ஆஸ்திரேலியா இணங்கியது.

இந்தத் தீர்மானம், நாடுகளுக்கு இடையிலான கலாச்சார உறவுகளை வலுப்படுத்துவதையும், தொன்மையான பொருட்களை அதன் தாயகத்திற்கே மீண்டும் கொண்டு சேர்க்கும் சர்வதேச முயற்சியையும் பிரதிபலிக்கிறது.

மீட்கப்பட்ட இந்த சிலைகள் இந்தியாவின் ஆன்மீக மற்றும் வரலாற்றுப் பாரம்பரியத்தின் முக்கிய அடையாளங்களாகக் கருதப்படுகின்றன.

ஆஸ்திரேலியாவால் இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பப்படும் (Repatriation) மூன்று பண்டைய சிலைகள் விபரம் -

பத்திரகாளி - இந்தியாவின் சக்தி வழிபாட்டில் முக்கியத்துவம் வாய்ந்த தேவியின் பண்டைய சிலை.

நந்தி - சைவ சமய மரபில் புனிதமாகக் கருதப்படும் நந்தி தேவனின் சிலை.

கார்த்திகேயர் - போர் தெய்வமாகவும், பண்டைய தமிழ்ப் பண்பாட்டின் முக்கியக் கடவுளாகவும் போற்றப்படும் கார்த்திகேயரின் சிலை.

கலாச்சாரப் பாரம்பரியத்தைப் பாதுகாத்தல்

பண்டைய காலத்தைச் சேர்ந்த இந்த சிலைகளைத் திரும்பப் பெறுவது, இந்தியாவின் சிதறிப்போன கலாசார அடையாளங்களை ஒருங்கிணைக்கும் முயற்சியின் ஒரு பகுதியாகும். இந்தச் சிலைகள் இந்தியாவின் கலை மற்றும் மத வரலாற்றுடன் ஆழமான தொடர்புடையவை.

ஆஸ்திரேலிய அரசின் இந்த நடவடிக்கை, திருடப்பட்ட அல்லது முறையற்ற முறையில் கொண்டு செல்லப்பட்ட கலைப்பொருட்களை மீண்டும் அவற்றின் சொந்த நாடுகளுக்குத் திருப்பி அனுப்பும் சர்வதேச நெறிமுறைகளுக்கு இணங்க அமைந்துள்ளது.

இது இரு நாடுகளுக்கு இடையே நிலவும் பரஸ்பர புரிதலையும், கலாசார விழுமியங்களுக்கான மரியாதையையும் காட்டுகிறது.

ஆஸ்திரேலியாவிலிருந்து பத்திரகாளி, நந்தி மற்றும் கார்த்திகேயர் சிலைகளை மீட்டெடுப்பதற்கான அறிவிப்பு, இந்தியாவின் கலாச்சார இறையாண்மையை நிலைநாட்டுவதில் கிடைத்துள்ள ஒரு குறிப்பிடத்தக்க வெற்றியாகும்.



# சிறுமியை பாலியல் தொழிலில் ஈடுபடுத்தியவருக்கு சிறை!

ஆஸ்திரேலியாவிற்கு 17 வயது சிறுமி ஒருவரைக் கடத்தி வந்து, கட்டாயப்படுத்தி பாலியல் தொழிலில் ஈடுபடுத்திய குற்றச்சாட்டில் சூர்யா சுபெக்தி (Surya Subekti - 45) என்ற நபருக்கு 6 ஆண்டுகள் மற்றும் 5 மாதங்கள் சிறைத்தண்டனை விதித்து சிட்னி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தவறு செய்ததற்காக அவர் உண்மையான வருத்தத்தை வெளிப்படுத்தவில்லை என்று குறிப்பிட்ட மாவட்ட நீதிமன்ற நீதிபதி நிக்கோல் நோமன், அவர் பிணையில் வர முடியாதவாறு 4 ஆண்டுகள் மற்றும் 5 மாதங்கள் கட்டாய சிறைவாசத்தை அனுபவிக்க வேண்டும் என்றும், 2030 நவம்பருக்கு முன்பாக அவர் விடுதலை பெற முடியாது என்றும் உத்தரவிட்டார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான சுபெக்தி, 18 வயதுக்குட்பட்ட ஒருவரைப் பாலியல் சேவைக்காக ஆஸ்திரேலியாவிற்குள் அழைத்து வந்தது மற்றும் கட்டாய உழைப்பில் ஈடுபடுத்தியது ஆகிய இரு குற்றச்சாட்டுகளை நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டார்.

இந்த குற்றச்சாட்டுகளுக்கு முறையே அதிகபட்சமாக 25 ஆண்டுகள் மற்றும் 12 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட வாய்ப்பிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சம்பந்தப்பட்ட சிறுமி தனது சொந்த விருப்பத்தின் பேரிலேயே, ஒப்பந்தக் கடமைகளை முழுமையாக அறிந்துகொண்டு ஆஸ்திரேலியா வந்தார் என்று சுபெக்தியின் சட்டத்தரணிகள் வாதிட்டனர்.

ஆனால், ஆஸ்திரேலிய சட்டப்படி அவர் ஒருசிறுமி என்றும், பாலியல் தொழிலில் ஈடுபடுவதற்கான சட்டப்பூர்வ வயது 18 என்றும் சுட்டிக்காட்டிய நீதிபதி, சிறுமியின் சம்மதம் சட்டப்படி செல்லுபடியாகாது என்று கூறி அந்த வாதத்தை நிராகரித்தார்.

சிறுமிக்கு 17 வயது என்பதை நன்கு அறிந்திருந்த சுபெக்தி, அவரது வயது அதிகாரிகளிடம் மாட்டாமல் இருப்பதற்கான ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார். மேலும், அந்தச் சிறுமியின் விசா, போக்குவரத்து மற்றும் இரண்டு மாதங்களாக குறிப்பிட்ட சில விபச்சார விடுதிகளுக்கு அவரை அனுப்புவது உள்ளிட்ட கடத்தல் வேலைகளில் சுபெக்தி முக்கியமான பங்கு வகித்துள்ளார்.

இந்தக் குற்றத்திற்கு உடந்தையாக இருந்து, சிறுமியை விபச்சார விடுதிகளுக்கு ஏற்றிச் சென்ற ஓட்டுநரான எல்டன் வாலண்டினோ (Elton Valentino - 32) என்பவருக்கு 2 ஆண்டுகள் மற்றும் 8 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

எனினும், விபச்சார விடுதியில் இருந்த அனைத்துப் பெண்களும் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்று சுபெக்தி கூறியதை நம்பியே தான் இதில் ஈடுபட்டதாக வாலண்டினோ தெரிவித்தார்.

அவர் 2024 அக்டோபர் முதல் காவலில் இருந்து வருவதாலும், தனது தவறுக்காக உண்மையான வருத்தத்தை வெளிப்படுத்தியதாலும், அவர் இந்த ஆண்டு (2026) ஆகஸ்ட் மாதத்தில் நன்னடத்தை பிணையின் கீழ் விடுவிக்கப்பட வாய்ப்புள்ளது என்று நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

# சீன ஏவுகணைச் சோதனைக்கு ஆஸ்திரேலியா கண்டனம்



பசிபிக் பெருங்கடல் பகுதியில் சீனா நடத்திய கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனைக்கு சாலமன் தீவுகள் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் தங்களது பலத்த கண்டனங்களைப் பதிவு செய்துள்ளன.

ஆஸ்திரேலியப் பிரதமர் அந்தோனி அல்பானிஸ் மற்றும் சாலமன் தீவுகளின் பிரதமர் மேத்யூ வேல் ( ஆகியோர் கூட்டாக நடத்திய செய்தியாளர் சந்திப்பில், இரு நாடுகளுக்கும் இடையிலான விரிவான உடன்படிக்கை மற்றும் கல்வி, சுகாதாரத்திற்கான புதிய நிதியுதவிகள் குறித்து அறிவிக்கப்பட்டது.

இறுதியாகப் பேசிய ஆஸ்திரேலியப் பிரதமர் அல்பானிஸ், "இந்த உலகிற்கு அணு ஆயுதங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டுமே தவிர, நிச்சயமாக அதிகரிக்கக் கூடாது," என்று வலியுறுத்தினார்.

# வாழ்க்கைச் செலவு பாதிப்பு நீடிக்கும்!



ஆஸ்திரேலியாவில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான போராட்டம் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கலாம் என மத்திய வங்கி கணித்துள்ளது.

இதனால் ஆஸ்திரேலிய மக்கள் மேலும் 2 வருடங்களுக்குப் பொருளாதார நெருக்கடியைச் சந்திக்க நேரிடலாம்.

ஜூன் மாதம் நடைபெற்ற வட்டி விகிதக் கூட்டத்தில், ரொக்க வீதத்தை 4.35 விழுக்காடாக எவ்வித மாற்றமும் இன்றித் தக்கவைக்க வாரியம் முடிவு செய்துள்ளது.

பணவீக்கத்தை 2-3% என்ற இலக்கு வரம்பிற்குள் கொண்டு வர இன்னும் இரண்டு ஆண்டுகள் ஆகலாம் என அதன் கூட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் ஈரானுக்கு இடையே நிலவும் பதற்றமான சூழல் மற்றும் மத்திய கிழக்கில் தொடரும் போர் காரணமாக, எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள தடைகள் பணவீக்கத்தை மேலும் அதிகரிக்கக் கூடும் என RBA கவலை வெளியிட்டுள்ளது.

உலக அளவில் கச்சா எண்ணெய் விலை அதிகரிப்பது ஆஸ்திரேலியப் பொருளாதாரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள நிதியமைச்சர் ஜிம் சால்மர்ஸ், ஆஸ்திரேலியப் பொருளாதாரம் வெளிநாட்டு மோதல்களால் "பிணைக் கைதியாக" வைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.


CEYLON EXPRESS
MONEY TRANSFER
Best Rates Guarantee
Same Day Bank Transfer
Responsible Customer Support
Easy, Quick Internet Money Transfer
282-284, londales st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052


MS JEWELRY WORK SHOP
No:- 87, McIntyre Road, Sunshine North VIC 3020 (Inside Barber Shop)
WORKING DAYS
MON - SUN (10 AM TO 6 PM)
WEDNESDAY (CLOSED)
+61 469 033 450
காது குத்துதல், பழைய நகைகள் திருத்துதல், உடைந்த நகைகள்
ஒட்டுதல் மற்றும் புதிய நகைகள் என்பன செய்து கொடுக்கப்படும்
Ear Piercing, Old Jewelry Repair, Broken Jewelry Repair, and New Jewelry Will Be Provided

# மாத ராசிபலன்



## மேடம்

மேஷ ராசி நேயர்களுக்கு இந்த மாதம் தன்னம்பிக்கையும் ஆற்றலும் அதிகரிக்கும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியங்கள் வெற்றிகரமாக முடியும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் பாராட்டும், புதிய அங்கீகாரமும் கிடைக்கும். கூட்டு வியாபாரத்தில் புதிய முதலீடுகளைத் தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுகள் சுமுகமாக முடியும். கணவன்-மனைவி இடையே ஒற்றுமை பலப்படும். நிதி நிலைமை திருப்திகரமாக இருந்தாலும், ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பது நல்லது. பிள்ளைகளின் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தவும். அதிர்ஷ்ட எண்– 9: வழிபாடு: முருகப்பெருமான்.

## இடபம்

ரிஷப ராசி நேயர்களுக்கு இந்த மாதம் பொறுமையும் நிதானமும் தேவைப்படும். தொழில் மற்றும் வியாபாரத்தில் போட்டியாளர்களின் நெருக்குதல்கள் அதிகரிக்கலாம், எனினும் சாதுரியத்தால் அவற்றைச் சமாளிப்பீர்கள். உத்தியோகஸ்தர்களுக்குப் பணியிடத்தில் புதிய பொறுப்புகள் தேடி வரும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளால் மகிழ்ச்சி உண்டாகும். பொருளாதார ரீதியாக வரவுகள் இருந்தாலும், திடீர் மருத்துவச் செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. தூரத்துப் பயணங்களின் போது உடைமைகளில் கவனம் தேவை. வீண் விவாதங்களைத் தவிர்க்கவும். அதிர்ஷ்ட எண்– 6 : வழிபாடு: ஸ்ரீ மகாலட்சுமி

## மிதுனம்

மிதுன ராசி நேயர்களுக்கு இந்த மாதம் எதிலும் லாபம் தரும் மாதமாக அமையும். உங்களின் பேச்சாற்றலால் கடினமான காரியங்களையும் எளிதில் சாதிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட லாபம் இரட்டிப்பாகும். உத்தியோகத்தில் இடமாற்றம் அல்லது பதவி உயர்வுக்கான சாதகமான சூழல் நிலவும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் அமைதியும் நிலவும். நீண்ட நாட்களாக வராத பழைய கடன்கள் வசூலாகும். புதிய சொத்துக்கள் அல்லது வாகனங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். ஆரோக்கியம் சீராக இருக்கும். அதிர்ஷ்ட எண்– 5: வழிபாடு: மகாவிஷ்ணு

## கடகம்

கடக ராசி நேயர்களுக்குத் திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் தடையின்றி நிறைவேறும். மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய உத்திகளைக் கையாண்டு லாபத்தை ஈட்டுவீர்கள். உத்தியோகஸ்தர்களுக்குப் பணியிடத்தில் சுமுகமான சூழல் நிலவும். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். பூர்வீக சொத்துக்கள் தொடர்பான பிரச்சினைகளில் சாதகமான தீர்வு கிடைக்கும். மாணவர்களுக்குக் கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். அதிர்ஷ்ட எண்– 2 :வழிபாடு: அம்பிகை

## சிம்மம்

சிம்ம ராசி நேயர்களுக்குத் தொட்டதெல்லாம் துலங்கும் நன்னாளாக இந்த மாதம் அமையும். அரசாங்க வழியில் எதிர்பார்த்த உதவிகள் எளிதில் கிடைக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய கூட்டாளிகள் இணைவார்கள், இதனால் வணிகம் விரிவடையும். உத்தியோகத்தில் உங்கள் நிர்வாகத் திறமை வெளிப்படும், உயர் பதவிகள் தேடிவரும். குடும்பத்தில் சுப நிகழ்வுகள் கைகூடி வரும். உறவினர்களிடையே ஒற்றுமை பலப்படும். பணவரவு திருப்திகரமாக இருக்கும், கடன் சுமைகள் குறையும். அதிர்ஷ்ட எண்–1 : வழிபாடு: சூரிய பகவான்

## கன்னி

கன்னி ராசி நேயர்களுக்குச் சாதக பாதகங்கள் கலந்த மாதமாக இருக்கும். எதிலும் அவசரப்படாமல் நிதானமாகச் செயல்படுவது வெற்றியைத் தரும். தொழில் மற்றும் வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும் புதிய முதலீடுகளைத் தள்ளிப் போடுவது நல்லது. உத்தியோகத்தில் மேலதிகாரிகளிடம் பேசும்போது வார்த்தைகளில் கவனம் தேவை. குடும்பத்தில் தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்ப்பதன் மூலம் அமைதியைக் காக்கலாம். ஆன்மீகப் பயணங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அது மனதிற்கு நிம்மதியைத் தரும். அதிர்ஷ்ட எண்– 5 : வழிபாடு: விநாயகர்

## துலாம்

துலாம் இராசி நேயர்களுக்கு மகிழ்ச்சியும் உற்சாகமும் நிறைந்த மாதமாக இருக்கும். உங்களின் நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்புடன் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். கணவன்–மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். தங்கம் மற்றும் ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். வெளிநாடு செல்ல முயல்பவர்களுக்குச் சாதகமான செய்திகள் வந்து சேரும். அதிர்ஷ்ட எண்– 7 : வழிபாடு: ஆஞ்சநேயர்

## விருச்சிகம்

விருச்சிக ராசி நேயர்களுக்கு எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றியைத் தரும். உங்களின் தைரியமும் தன்னம்பிக்கையும் கூடும். தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய விரிவாக்கப் பணிகளைத் தொடங்கலாம், நல்ல லாபம் கிடைக்கும். பணியிடத்தில் உங்களின் உழைப்பிற்கு ஏற்ற பலன் மற்றும் பதவி உயர்வு கிடைக்க வாய்ப்புள்ளது. அண்ணன், தம்பி இடையிலான கருத்து வேறுபாடுகள் நீங்கும். வீடு, மனை வாங்கும் முயற்சிகள் சாதகமாக முடியும். வங்கிச் சேமிப்புகள் உயரும். அதிர்ஷ்ட எண்–3 : வழிபாடு: தட்சிணாமூர்த்தி

## தனுசு

தனுசு ராசி நேயர்களுக்குத் திட்டமிட்ட காரியங்களில் சற்று அலைச்சலுக்குப் பின் வெற்றி கிடைக்கும். தொழிலில் புதிய வாடிக்கையாளர்களைப் பெறக் கடினமாக உழைக்க வேண்டியிருக்கும். உத்தியோகஸ்தர்கள் வேலைகளில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் சிறு தவறுகளும் பெரிய விவாதமாக மாற வாய்ப்புள்ளது. குடும்பத்தினருடன் அனாவசியப் பேச்சுகளைத் தவிர்த்து சுமுகமாகப் பழகுவது நல்லது. புதிய முதலீடுகளில் நிபுணர்களின் ஆலோசனையைப் பெறவும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. அதிர்ஷ்ட எண் – 3 : வழிபாடு: ஷீரடி சாய்பாபா.

## மகரம்


மகர ராசி நேயர்களுக்குப் பொறுப்புகளும் கடமைகளும் அதிகரிக்கும் மாதமாக இருக்கும். கடின உழைப்பால் மட்டுமே இலக்குகளை அடைய முடியும். தொழில் மற்றும் வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும் வரவுக்கு ஏற்ற செலவுகளும் வந்து சேரும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரித்தாலும், உங்கள் பொறுமையால் அனைத்தையும் சமாளிப்பீர்கள். குடும்பத்தில் வாழ்க்கைத்துணையின் உடல் நலத்தில் கவனம் தேவை. மாணவர்களுக்குப் படிப்பில் கூடுதல் கவனம் தேவைப்படும். அதிர்ஷ்ட எண் – 8 :வழிபாடு: சனீஸ்வர பகவான்

## கும்பம்

கும்ப இராசி நேயர்களுக்கு எதிலும் சாதகமான பலன்கள் கிடைக்கும். சமூகத்தில் உங்களுக்கான மரியாதையும் செல்வாக்கும் உயரும். தொழில், வியாபாரத்தில் புதிய யுக்திகளை புகுத்தி லாபத்தை ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் நிலவி வந்த அனுகூலமற்ற சூழல் மாறி, மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் தடையின்றி நடக்கும். பொருளாதார நிலை மிகச் சிறப்பாக இருக்கும் பழைய கடன்களை அடைத்து நிம்மதி அடைவீர்கள். கலைத்துறையினருக்குப் பாராட்டுக்கள் கிடைக்கும். அதிர்ஷ்ட எண் – 4 : வழிபாடு: சிவபெருமான்

## மீனம்

மீன ராசி நேயர்களுக்குப் பல வழிகளில் இருந்தும் நன்மைகளும் அனுகூலங்களும் தேடி வரும். உங்களின் சிந்தனைகள் யாவும் நேர்மறையாக இருக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல முன்னேற்றமும், எதிர்பார்த்ததை விட அதிக லாபமும் கிடைக்கும். உத்தியோகத்தில் உங்களின் உழைப்பிற்குத் தகுந்த ஊதிய உயர்வு கிடைக்க வாய்ப்புள்ளது. குடும்பத்தில் மகிழ்ச்சியான தருணங்கள் அமையும். நீண்ட நாள் நோய்களில் இருந்து முழுமையான நிவாரணம் கிடைக்கும். அதிர்ஷ்ட எண் –3 : வழிபாடு: குலதெய்வ வழிபாடு




**Help us understand what Australia needs now and into the future.**
**Census night - Tuesday 11 August**

**census.abs.gov.au/multicultural**

AUSTRALIA
Australian Bureau of Statistics

Census

Authorised by Australian Bureau of Statistics, Canberra


EVERYTHING
YOU NEED
ALL IN ONE PLACE!
FAST DELIVERY
THIS WAY UP
ஆதவன் ATHAVAN
Cargo Service
Australia to Sri Lanka
Sri Lanka to Australia
BEST SERVICES:
Cargo & Shipping Services
Groceries & Household Items
Spices Export & Import
Pooja Products
Boutique Dress & Saree Collection
Contact Us For Details
Sri Ayyappa Pvt LTD
+61 449 722 392
40 David street, Dandenong VIC 3175, Australia
ஸ்ரீ AYYAPPA
ATHAVAN